# தளிர் 2022

மாணவர் இதழ்

## பொருநை தமிழ் மன்றம்

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# தளிர் 2022

நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தளிர் 2022 |
| *சிறப்பாசிரியர்* | : | **பி. என். ரிச்சர்டு ஜெகதீசன்,** முதல்வர் |
| *பதிப்பாசிரியர்* | : | **இரா. ராஜேந்திரன்,** பேராசிரியர் |
| *ஆசிரியர்* | : | **க. அருளானந்தம்,** உதவிப் பேராசிரியர் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | பொருநை தமிழ் மன்ற இதழ் |
| உரிமை | : | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சென்னை |
| வெளியீடு நாள் | : | 16.09.2022 |
| வெளியீடு தருணம் | : | கல்லூரி மற்றும் விடுதி நாள் விழா |
| வெளியீடு இடம் | : | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தேனி |
| பக்கங்கள் | : | 60 |



**முனைவர் க.ந. செல்வக்குமார்**

துணைவேந்தர்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்



**முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்**

பதிவாளர்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்



**முனைவர். பி.என். ரிச்சர்டு ஜெகதீசன்**

முதல்வர்

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக்கழகம்

மாதவரம் பால் பண்ணை
சென்னை – 600 051
தொலைபேசி : 0091-44 2555 1584 (நேரடி)
0091-44 2555 1586 / 87
மின்னஞ்சல் : registrar@tanuvas.org.in

முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், M.V.Sc., Ph.D.,
பதிவாளர்

## அணிந்துரை

"தமிழுக்கு அமுதென்று பேர்- அந்த தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றார் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்.

வாழ்க்கையை இலக்கணம் வகுத்த வண்டமிழ் மொழியாம் தமிழில் பழந்தமிழர் வாழ்வை படம் பிடித்து காட்டும் இலக்கியங்களுக்கு குறைவில்லை. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ் கணக்கு, பதினெண் மேல்கணக்கு, ஐம்பெருங்காப்பியம் ஐஞ்சிறு காப்பியம் போன்றவை தமிழின் பெருமையை பறைசாற்றுகின்றன பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் பக்திமனம் பரப்பும்; நல்வழி, மூதுரை உலகநீதி கொன்றைவேந்தன் போன்றவை நீதிநெறி காட்டும்; தொல்காப்பியம், அகத்தியம், நன்னூல் தண்டியலங்காரம், யாப்பெருங்கலக் காரிகை போன்ற இலக்கண நூல்களும் தமிழின் செழுமைக்குச் சான்று. இன்றைய தலைமுறையிலும் தொடர்ந்து தமிழுக்கு தொண்டாற்றி வரும், தமிழில் எழுதி வரும் ஜெயமோகன், ராமகிருஷ்ணன், நாஞ்சில்நாடன், இமையம் போன்ற எழுத்தாளர்களைக் கொண்ட அரிய உலகு நம் தமிழ் உலகு.

தேனி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பொருநை தமிழ் மன்றம் தொடங்கி செயல்பட்டு வருவது மகிழ்ச்சி. மாணவர்களின் முதலாவது இதழாக தளிர் 2022 வெளிவருவது பெரு மகிழ்ச்சி.

மாணவர்கள் தங்களின் கால்நடை அறிவியல் புலமையை மட்டும் இன்றி தமிழிலும் சிறந்து விளங்க இப்பல்கலைக்கழகம் என்றும் ஊன்றுகோலாய் வழிகாட்டியாய் அமையும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

பொருநை தமிழ் மன்றத்திற்கும் தளிர் 2022 மாணவர் இதழுக்கும் வாழ்த்துக்களும் வணக்கங்களும்

வாழ்க தமிழ்!

வெல்க தமிழகம்!

பா.டென்சிங் ஞானராஜ்
பதிவாளர்

# பொருநை தமிழ் மன்றம்

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி

தலைவர் : **முனைவர். பி.என். ரிச்சர்டு ஜெகதீசன்,**
முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.

செயலாளர் : **மருத்துவர். க.அருளானந்தம்,**
உதவிப் பேராசிரியர்,
கால்நடை சிகிச்சை வளாகம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.

பொருளாளர் : **மருத்துவர். அ.ராஜதுரை**
உதவிப் பேராசிரியர், கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தேனி.

ஆலோசணைக் குழு உறுப்பினர்கள் : **முனைவர். இரா.இராஜேந்திரன்**
பேராசிரியர் மற்றும் தலைவர்
விலங்கின மரபியல் மற்றும் இனப்பெருக்கத்துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தேனி.

**முனைவர். இரா.உமாராணி**
பேராசிரியர் மற்றம் தலைவர், கால்நடை சிகிச்சை வளாகம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.

**முனைவர். வி.நவீன்குமார்,**
உதவிப் பேராசிரியர், கால்நடை சிகிச்சை வளாகம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.

**மருத்துவர். கி.சுகந்தியா,**
உதவிப் பேராசிரியர், கால்நடை பண்ணை வளாகம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.

மாணவச் செயலாளர்கள் : **திரு. செ.ஜெயசூர்யா & செல்வி.த.மார்டினா**
இரண்டாமாண்டு இளநிலை கால்நடை மருத்துவம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.

மாணவ செயற் குழு உறுப்பினர்கள் : **திரு. க.வீரப்பன்**
**திரு. சே.தேவன்**
**செல்வி. க.ஜெய சங்கரி**
**செல்வி. ஜெ.பெல்ஷியா ஸ்னோலெட்**
இரண்டாமாண்டு இளநிலை கால்நடை மருத்துவம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.

# பொருநை தமிழ் மன்றம் – தொடக்க விழா






# பொருளடக்கம்


1. உலகில் இன்று ........ 1
2. ஜல்லிக்கட்டு ........ 2
3. தலையணை ........ 7
4. வேதனை ........ 7
5. மண் வாசனை ........ 7
6. சிட்டுக்குருவி பேசுகிறேன் ........ 8
7. தமிழ் ........ 11
8. வேளாண்மை ........ 12
9. சித்தார்த்தன் ........ 15
10. அம்மா ........ 18
11. முத்தமிழ் ........ 22
12. அறியப்படாத தீவின் கதை ........ 23
13. சமநிலை ........ 24
14. விழிமழை ........ 26
15. வியக்க வைக்கும் உண்மைகள் ........ 27
16. ஆங் சான் சூச்சி ........ 29
17. தஞ்சைப் பெரிய கோவில் ........ 33
18. சித்திரமதி ........ 34
19. மழை ........ 35
20. எங்கே? ........ 36
21. அம்மா ........ 36
22. வளைவுகள் ........ 37
23. அப்பா ........ 37
24. வீழ்ச்சி ........ 38
25. வாழ்க்கை ........ 38

26. விரிசல்........................................................................................................40
27. சீறிடு பெண்ணே..............................................................................................40
28. என்றாவது ஒரு நாள் ........................................................................................41
29. சன்னல் வழியே ................................................................................................42
30. சித்திரமதி ........................................................................................................44
31. அப்பா...............................................................................................................45
32. தமிழ் ...............................................................................................................45
33. பொன்னியின் செல்வன் ......................................................................................46
34. பண்ணையில் ஒரு மிருகம் ..................................................................................49
35. நல்லன்பின் விளைவது வாழ்வு ..........................................................................50

# உலகில் இன்று...

உலகில் இன்றைய நிகழ்வுகளே நாளைய வரலாறாக மாறுகின்றது. இந்தியாவின் புதிய குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரௌபதி முர்முவை பேசிக்கொண்டிருக்கும் அதே வேளையில் இன்று இரு நாடுகளும், போரிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆம், நான் மூன்றாம் உலகப்போரைப் பற்றி தான் பேசிக் கொண்டிருக்கின்றேன்.

மூன்றாம் உலகப்போர் நடக்கும் என முன்னரே கணித்துக் கூறிச் சென்று விட்டார்கள் வல்லுநர்கள், அவர்கள் கூறியது போலவே போர் தொடங்கி விட்டது. ஆறு மாதங்களாக நடந்து கொண்டிருக்கும் இப்போருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க இருநாட்டுத் தலைவர்களும் தயாராக இல்லை. ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் நடக்கும் இப்போரில் இந்தியா இரு நாடுகளுக்குமே ஆதரவு தெரிவிக்காமல் உள்ளது. உக்ரைன் போருக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியாது என்று ரஷ்யா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. அந்தப்போர் இன்னும் நீள நீள ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து அந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதில் சிக்கலும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். உக்ரைனுக்கு ஆயுதங்களையும் பிற உதவிகளையும் அளித்து அந்த நாட்டு வீரர்களை ரஷ்யாவுக்கு எதிராக மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து தூண்டி வருகின்றன. எனவே, இந்தப் போர் இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று யாராலும் கணிக்க முடியாது.

சோவியத் யூனியனுக்கு எதிராக கடந்த 1949 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அமைப்பு ''நார்த் அட்லாண்டிக் ட்ரீட்டி அமைப்பு'' (நேட்டோ).அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட 12 நாடுகள் இணைந்து அந்த அமைப்பை உருவாக்கின. அமெரிக்காவுக்கு சவால் விடும் வகையில்





சக்திவாய்ந்து விளங்கிய சோவியத் யூனியனுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட அந்த அமைப்பு, சோவியத் யூனியன் உடைந்து வலுவிழந்த நிலையிலும் தன்னை விரிவாக்கம் செய்து வந்தது. தற்போது அந்த அமைப்பில் 30 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

நேட்டோவின் விரிவாக்கத்துக்கு ரஷ்யா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தது. குறிப்பாக அண்டை நாடான உக்ரைன் நேட்டோவில் இணைந்தால், தங்களது தலைநகர் மாஸ்கோவை சில நிமிடங்களில் தாக்கி அழிக்கும் வகையில் அங்கு அமெரிக்க ஏவுகணைகள் நிறுத்தப்படுவதற்கு வழியேற்படும் எனவும் அது தங்களது பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் எனவும் ரஷ்யா கூறிவந்தது. எனினும், நேட்டோவில் இணைவதற்கு தற்போதைய அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி தலைமையிலான உக்ரைன் அரசு தொடர்ந்து ஆர்வம் காட்டி வந்ததையடுத்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த பிப்ரவரி 24 ஆம் தேதி படையெடுத்தது.


இன்று வரை இப்போருக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகத் தெரியவில்லை. ஐக்கிய நாடுகளின் சபை பாதுகாப்பு கவுன்சிலில் உக்ரைன் விவகாரத்தில் முதல் முறையாக இந்தியா ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்துள்ளது. உக்ரைன் போருக்குப் பின்னர் ரஷ்யாவுக்கு எதிராக பல்வேறு தீர்மானங்கள் ஐ.நா.சபையில் கொண்டு வரப்பட்ட நிலையில், இந்த தீர்மானங்களில் ரஷ்யாவை எதிர்த்து வாக்களிக்காமல், இந்தியா தொடர்ந்து புறக்கணித்து வந்தது.

இந்நிலையில் ஐ.நா.சபை பாதுகாப்பு கவுன்சிலில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை வீடியோ டெலிகான்பரென்ஸ் மூலம் உரையாற்ற அழைப்பு விடுக்கப்பட்டது. உக்ரைன் அதிபரை உரையாற்ற அழைப்பதை ஏற்க முடியாது என்று, அழைப்பை எதிர்த்து ரஷ்யா ஐ.நா.சபையில் தீர்மானம் கொண்டு வந்தது. ரஷ்யாவின் இந்த தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்த 13 நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

எனினும் அமைதியை விரும்பும் நாடாக விளங்கும் இந்தியா இப்போரை முடிப்பதற்கே ரஷ்யாவிற்கு எதிராக வாக்களித்தது. இறுதியாக, இப்போர் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும்.

**ரித்திகா**
முதலாமாண்டு

# ஜல்லிக்கட்டு



## முன்னுரை

தமிழர்கள் வீர விளையாட்டுகளின் மூலம் தங்களது வீரத்தினை வெளிப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அந்த வகையில் தமிழர்களின் வீர விளையாட்டுக்களில் ஒன்றாக ஜல்லிக்கட்டு விளங்குகிறது. இளம் காளையர்கள் நிஜக் காளைகளை அடக்கி தங்களது வீரத்தை வெளிப்படுத்துவர். ஜல்லிக்கட்டின் வரலாறு அதன் சிறப்பம்சங்கள் போன்ற பலவற்றையும் இக்கட்டுரையில் காண்போம்.

## வரலாறு

ஜல்லிக்கட்டு பழந்தமிழ் இலக்கியங்களிலும், சிந்துவெளி நாகரிகத்திலும் நிகழ்ந்ததாக சான்றுகள் உள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களில் 'ஏறுதழுவுதல்' என்ற சொல் காளையை அடக்கும் வீர விளையாட்டின் பெயராக பயன்படுத்தப்பட்டுள்ளன.

கி.மு. 2000 ஆண்டு அளவிலேயே ஏறுதழுவல் வழக்கத்தில் இருந்தது என்று ஐராவதம் மகாதேவன் போன்ற வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். கொல்லக் கூடிய காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் கொல்லேறு தழுவல் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது.

இதற்கு ஆதாரமாக புதுடெல்லியில் உள்ள தேசிய கண்காட்சியில் சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளை உருவமும் அதை அடக்க முயலும் வீரரை

அக்காளை தூக்கி எறிவதும் உயிரோட்டமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டுச் சொல்லலாம். புளியங் கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் இப்போதும் வழக்கத்தில் உள்ளது.

மேலும் 50 ஆண்டுகளுக்கு முன்னர் சல்லிக்காசு என்னும் இந்திய நாணயங்களை துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டி விடப்படும் வழக்கம் இருந்தது. இதனால் தான் பிற்காலத்தில் சல்லிக்கட்டு என்று என்று மாறியது. பின்னர் பேச்சுவழக்கில் திரிந்து ஜல்லிக்கட்டு என்று அழைக்கப்படுகிறது.

## விஞ்ஞானிகளின் வியப்பு

இந்திய நாட்டின் ஜல்லிக்கட்டு விளையாட்டானது பெரிதும் வியந்து பார்க்கப்படுகின்றது. உலகளவில் இந்திய நாட்டின் பசுக்களின் பாலில் அதிக நோய் எதிர்ப்பு சக்தி காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது.

## ஜல்லிக்கட்டின் சிறப்புகள்

ஜல்லிக்கட்டில் ஆயர் மட்டுமின்றி இன்று பலரும் பங்கேற்கின்றனர். ஜல்லிக்கட்டில் வென்றவர் பணத்தைப் பரிசாகப் பெறுவதுண்டு. தமிழர்களின் சிறப்பு பண்டிகைகளில் ஒன்றான தைத் திருநாளின் இரண்டாம் நாளில் மாட்டுப்பொங்கல் அன்று ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு பெரும் விழாவாக கொண்டாடப்படுகின்றது. விளையாட்டானது கிராமிய தேவதைகளில் வழிப்பாட்டு நம்பிக்கையுடன் தொடர்புடையதாகத் திகழ்கின்றது.

## சங்க இலக்கியங்கள்

ஏழு காளைகளை அடக்கி தன் மாமன் மகளான நப்பினை என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் பகவான் கிருஷ்ணர். அன்று முதல் காளையை அடக்கும் மாவீரனுக்கே அந்த பெண்ணிற்கு பிடிக்கும் பட்சத்தில் ஆயர் (யாதவ்) குலத்தினர் தங்கள் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். சங்க இலக்கியமான கலித்தொகை

“கொல்லேற்றுக் கோடஞ்சுவானை
மறுமையும்
புல்லாளே ஆய மகள்
அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லாத
நெஞ்சிலார் தோய்ப்பதற்கு அரிய – உயிர் துறந்து
நைவாரா ஆய மகள் தோள்.”

என்று பாடப்பட்டுள்ளது.

## புலிக்குளம் காளை சிறப்பு

புலிக்குளம் என்னும் ஊர் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. சல்லிக்கட்டுக்கு என்று தனிச்சிறப்பாக வளர்க்கப்படும் காளையினம் புலிக்குளம். இது காங்கேயம் காளைகளை விட மிகவும் மூர்க்கமானது.

## வாடிவாசல்

வாடிவாசல் ஜல்லிக்கட்டு என்பது ஒரு சிறிய இடத்திற்குள் மாட்டை நிறுத்தி அங்கு காளைகளின் மூக்கணாங்கயிறு அறுக்கப்படும். பின்னர் அங்கிருந்து விடப்படும் காளையை வீரர்கள் அடக்க வேண்டும்.

## மஞ்சுவிரட்டு

காளைகள் ஒரு திறந்தவெளி மைதானத்திற்குள் ஒவ்வொன்றாக அவிழ்த்து விடப்படும். அங்கு காளையை அடக்க வேண்டும்.

## வடம் ஜல்லிக்கட்டு

காளை 49 அடி நீளக் கயிற்றில் கட்டப்படும் மைதானத்தின் நடுவில் உள்ள கம்பத்தில் கட்டப்பட்டிருக்கும். காளை அதிகபட்சம் 49 அடி மட்டும் வட்டமாக வர முடியும். அந்த வட்டத்திற்குள் வீரர்கள் சென்று காளையை அடக்க வேண்டும். வட்டத்தை விட்டு வெளியே வரும் வீரர்கள் வெளியேற்றப்படுவார்கள். போட்டி 30 நிமிடம் நடைபெறும். 30 நிமிடத்திற்கு பிறகும் வட்டத்திற்குள் இருப்பவர்கள் வெற்றியாளர்கள்.

## ஜல்லிகட்டு நடைபெறும் இடங்கள்

மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், பாலமேடு அவனியாபுரம், பேரையூர் போன்ற இடங்களிலும் சிவகங்கை மாவட்டம் சிராவயல், சிங்கம்புணரி, புதூர் அரளிப்பாறை போன்ற இடங்களிலும் புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை போன்ற இடங்களிலும் சல்லிக்கட்டு நடைபெறுகிறது. மேலும், திருச்சி, தேனி போன்ற மாவட்டங்களிலும் நடைபெறுகிறது.


## தடை

கடந்த 2008 ஆம் ஆண்டு விலங்கு நல வாரியம் மற்றும் பீட்டா உள்ளிட்ட சில தனியார் அமைப்புகள் ஜல்லிக்கட்டைத் தடைசெய்யக் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் கடந்த 2010ம் ஆண்டு ஆண்டிற்கு 5 மாதம் மட்டுமே

ஜல்லிக்கட்டை நடத்த உத்தரவு அளித்ததுடன் அதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளையும் அறிவித்தது. முன்னதாக ஜல்லிக்கட்டை முறைப்படுத்த சட்டம் இயற்றப்பட்டது. அதன் பின்பு 2011ம் ஆண்டு காளையை காட்சிப்படுத்த தடை செய்யப்பட்ட விலங்குகள் பட்டியலில் சேர்த்தது. இந்நிலையில் உச்சநீதிமன்றம் ஜல்லிக்கட்டு விலங்குகளை வதை செய்வது என்று கூறி ஜல்லிக்கட்டிற்கு தடை கொண்டு வந்தது. இந்நிலையில் 2017ம் ஆண்டு தடையை நீக்க கோரி போராட்டம் நடந்தது. 2017ம் ஆண்டு பொங்கலை முன்னிட்டு ஜல்லிக்கட்டை நடத்த வேண்டும் என்று சென்னை மெரினா கடற்கரையில் இளைஞர்கள் கூடினர். இந்த கூட்டம் பெருங்கூட்டமாக மாறி தமிழகம் முழுவதும் புரட்சி பரவியது. இதன் பின் பல்வேறு நடவடிக்கைகளுக்கு பிறகு ஜல்லிக்கட்டிற்கு அனுமதி கிடைத்தது.

## முடிவுரை

ஜல்லிக்கட்டு என்பது தமிழர்கள் பாரம்பரியத்துடன் ஒன்றியது. இந்த விளையாட்டை மக்களிடமிருந்தும் காளைகளிடமிருந்தும் பிரிக்க முடியாது. தமிழரின் அன்பின் அடையாளம் விருந்தோம்பல் என்றால் தமிழர் வீரத்தின் அடையாளம் ஜல்லிக்கட்டு ஆகும்.




**பாரம்பரியத்தைப் பேணிக்காப்போம்..!**
**வீரத்தைப் பறைசாற்றுவோம்..!**

**தமிழரசி**
முதலாமாண்டு

## தலையணை

ஆசையில்
கட்டி அணைக்க
சோகத்தில்
கொஞ்சம் நனைக்க
கோபத்தை
கொட்டி தணிக்க
மோகத்தில்
முத்தம் கொடுக்க
உன்னை எண்ணி
நானும் தலையணையின்
மடியிலே...

## வேதனை

சிறார்களின்
கைப் படாத
அலங்கார
வளைவு
பலூன்கள்
என்ன பாவம்
செய்தோமோ
என்று புழுங்கி
ஒவ்வொன்றாக
உயிர் விடுகின்றன.

## மண் வாசனை

மழைப் பெண்
வருகைக்கு
பூமி மாப்பிள்ளை
பூசிக் கொள்ளும்
வாசனைப் பூச்சு!

**ஸ்ரீநிதி**
முதலாமாண்டு



# சிட்டுக்குருவி பேசுகிறேன்...

என் பெயரோ சிட்டுக்குருவி...
சுட்டித்தனத்தில் குட்டி அருவி
சின்னச்சின்ன சேட்டைகள் செய்து
சிரிக்க வைக்கும் செல்லப் பிள்ளை...!
சிறகடித்து பறந்து செல்வேன்
உங்கள் இமைச்சிறகையும்
நிறுத்தி வைப்பேன்
ஒருபிடி சோறுக்கு ஓடி வருவேன்
சுறுசுறுப்போடு சுற்றித் திரிவேன்
பட்டித் தொட்டி எங்கும்
பறந்து திரிந்தேன்
இன்று...
புகலிடம் தொலைந்து
பதுங்கி வாழ்கிறேன்
அழிந்து வரும் எங்கள் இனத்தை
எழுந்து பறக்க செய்திடுங்கள்
அழிவை தருகின்ற அலைபேசியை
அளவோடு கொஞ்சம் பயன்படுத்துங்கள்
வாழ்வியல் பாடம் கற்றுத்தந்தேன்
இன்று வாழ்க்கை
பிச்சை கேட்டு நிற்கிறேன்
கொஞ்சி பேசிட வரவில்லை
கெஞ்சிக் கேட்டிட வந்துள்ளோம்
நான் கொஞ்சும் குரலைக் கேளாமல்
மிஞ்சிய இனத்தையும் கொன்று விட்டால்
அலைபேசியில் மட்டுமே நானிருப்பேன்
உயிரற்ற நிழற்படமாக...!

**- ஷாலினி**
முதலாமாண்டு





விநாயகர்
சு. கீ. பரிநிதி.
BVV21035



# த மி ழ்

குன்றில்லா நிலத்திலும்
குறைவில்லா உயரம் கொண்டது
நம் “தமிழ்”
உதித்து ஆயிரம் ஆண்டானாலும்
உறையாமல் நிற்கிறது
நம் “தமிழ்”
தன்னிகரில்லா தலைமை
மிகையில்லா இனிமை...
ஆழ்கடலாக வளமை..
தமிழ்
தனித்து நிற்பதாலே இப்பெருமை...!
பழமை மிகுந்த மொழிதான்....
இளமை குறைந்த மொழி அன்றோ...!
உலகில் பல குரல்கள்” பேசிடுமே
நம் திருக்குறளை...
பல “தீ”க்கள் கேட்டிடுமே
நம் பாரதியை
கிளையாய்ப் பலமொழிகள்
கலந்ததே சில மொழிகள்
சிவந்ததே பாரதியின் கண்கள்
விழித்ததே என் விழிகள்....
கனவிலிருந்து
சில நொடிகளில் உணர்ந்ததே அவர் வரிகள்
**“பல வேடிக்கை மனிதரைப் போல்**
**நான் வீழ்வேனென்று நினைத்தாயோ”...!**
மறுத்தாலும், வெறுத்தாலும்
நாளும் நம் தமிழை
மறக்கவும் முடியாது!
மரணிக்கவும் முடியாது!



**கயல்விழி**
முதலாமாண்டு

# வேளாண்மை

இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மை. உலகத்தில் எத்தனையோ தொழில்கள் இருந்தாலும் தெய்வத்தின் தொழில் என்று உயர்ந்த தொழிலாக உழவுத் தொழிலே விளங்குகின்றது. பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறச்செய்வதற்கு வேளாண் பெருங்குடி மக்களே வழிவகுக்கிறார்கள். மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, மற்றும் உறைவிடம். இவற்றுள் உணவே முதலிடம் பிடிக்கிறது. ஆதி மனிதன் ஓரிடத்தில் நிலையாக வாழ வழிவகுத்தது உழவுத்தொழிலே. நிலங்களின் வகை அறிந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வகைப்படுத்தி வாழ்ந்த நம் முன்னோர் வேளாண்மைத் தொழிலில் வித்தகர்கள்.

வேளாண்மை செழிக்கவும் மானுடம் தழைக்கவும் சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பொன் ஏர் பூட்டுதல் தமிழரின் பண்பாட்டு மகுடம் ஆகும்.

“அகல உழுவதை விட
ஆழ உழுவதே மேல்
பருவத்தே பயிர் செய்
ஆடிப்பட்டம் தேடி விதை
எள்ளுக்கு ஏழு உழவு
குட்டைக்கலப்பை காட்டைக் கெடுக்கும்”

ஆகிய பழமொழிகள் நம் தமிழரின் உழவுத்தொழில் அறிவை எடுத்தியம்பும். மண்ணின் தன்மை அறிந்து பயிரிட்டவர் நம் தமிழர் என்பது தெரிகிறது.



“நெல்லுக்கு நண்டோட
வாழைக்கு வண்டியோட
தென்னைக்குத் தேரோட”

என்பதிலிருந்து பயிர் இடைவெளி குறித்த நுட்பம் புலப்படுகிறது.

‘ஆட்டுப்புழுக்கை அன்றைக்கே
மாட்டுச்சானம் மட்கினா தான்’

என்ற பழமொழி தமிழரின் இயற்கை உரம் பற்றிய அறிவைத் தெளிவாக்குகிறது. தைத்திருநாளில் உழவுத்தொழிலுக்கு உறுதுணை செய்த கதிரவனுக்கு நன்றி கூறி மகிழ்ந்தனர். கால்நடைகளுக்கு மாட்டுப்பொங்கல் என்று தனியாகவே விழாக் கொண்டாடினர்.

“விவசாயி சேற்றில் கால் வைத்தால் தான் நாம் அனைவரும் சோற்றில் கைவைக்க முடியும்” போன்ற வரிகள் மூலம் வேளாண்மையின் முக்கியத்துவத்தை அறிவோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கைப்பிடி உணவை உண்ணுவதற்கும் அதில் ஒவ்வொரு விவசாயின் உழைப்பு தங்கியிருக்கும். இதுவரைக்கும் விளம்பரத்தில் ஈடுபடாத ஒரே தொழில் வேளாண் தொழில் தான். ஏனென்றால் வேளாண்மை என்பது தொழில் அல்ல, நம் உயிர்நாடி. உலகத்தில் ஒவ்வொரு உயிர்களுக்கும் பசி என்ற உணர்வு இருக்கும் வரை வேளாண்மை அழியாது. தலைசிறந்த நாடுகள் தமது நாட்டின் வேளாண் தொழிலை ஊக்குவிக்கின்றது. அவர்களது உற்பத்திகளை முடிவு பொருட்களாக தனது தொழில் நுட்பங்கள் மூலமாக உற்பத்தி செய்து தனது உள்நாட்டு நுகர்வுக்கு பயன்படுத்தி எஞ்சியவற்றை அனைத்து நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றது. ஆனால் நம்மைப்போன்ற வளரும் நாடுகள் அவ்வாறில்லை. நம் நாட்டிலோ வேளாண் தொழிலைச் செய்ய முடியாமல் கடன் சுமையால் தற்கொலை செய்யும் துயர நிகழ்வுகள் மட்டுமே காணப்படுகின்றன. வேளாண் தொழிலில் ஈடுபடுவோர் நாளுக்கு நாள் குறைந்த வண்ணமே இருக்கின்றனர். மீண்டும் மீண்டும் எத்துயர் வரினும் தம் உடலை வருத்தி எமக்காகப் போராடும் வேளாண் மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் முழுமனதாக திட்டங்களை வகுக்க வேண்டும். உற்பத்தியாகும் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமை விவசாயிகளுக்கே வேண்டும். வேளாண்மைக்கு வேண்டிய உள்ளீட்டு வசதிகள், தொழில்நுட்பங்கள் போன்றவற்றை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளுக்குரிய காப்புறுதி ஆதரவுகளையும் உரிய மரியாதையையும் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

‘சுழன்றும் ஏர் பின்னது உலகு ஆதலால்
உழன்றும் உழவே தலை’


என்கிறார் வள்ளுவர். உழவுத் தொழில் இல்லாமல் போனால் பசி பட்டினி பஞ்சம் அதிகரித்து மக்கள் உணவில்லாமல் திண்டாடும் நிலை உருவாகும். மனிதனாக பிறந்த அனைவருமே

பணத்தைச் சம்பாதிக்க எத்தனைத் தொழில்களைத் தேடினாலும் உயிர்வாழ உணவைத் தேட வேளாண் தொழில் மட்டுமே இருக்கிறது. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் இடப்படும் நிலங்களில் மண்புழுக்கள் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. மண்புழு உழவனின் நண்பன் எனத் தெரிந்திருந்தும், இரசாயன நஞ்சுகளை நிலங்களில் விதைத்து நண்பர்களையே கொல்லும் அறிவீனத்தைச் செய்கிறோம்.

இன்றைக்கு இளம் வயதிலேயே பலர் தமது வாழ்வை இழக்கிறார்கள். எமது விவசாய முறையும் உணவு பழக்க வழக்கமும் மாறிவிட்டதனால் இந்த விளைவுகள் ஏற்படுகின்றன. நம் முன்னோர்கள் கடைபிடித்த நுணுக்கங்களைப் புரிந்து கொண்டு நஞ்சில்லாத இயற்கை விவசாய முறைகளை மேற்கொண்டு வரும் சந்ததியருக்கு வழிகாட்ட வேண்டும். இது நம் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும்.

“அடி காட்டிற்கு; நடு மாட்டுக்கு; நுனி வீட்டுக்கு” என்ற இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் கருத்திற்கிணங்க நடைமுறைக்கு சாத்தியமாக இயற்கையாக விவசாய முறைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு இன்றைக்கு மனிதகுலம் தள்ளப்பட்டுவிட்டது. “வேளாண்மையைக் காப்போம்” என்ற முழக்கத்தை எழுப்புவதோடு நிறுத்திவிடாமல் நம்மால் இயன்றவரை வேளாண்மைக்கும் வேளாண் பெருங்குடி மக்களுக்கும் துணை நிற்போம் என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்போம்.

**மேகவர்ஷினி**
முதலாமாண்டு



# சித்தார்த்தன்

## - ஹெர்மன் ஹெஸ்ஸெ -


### ஏன் இப்புத்தகம் என் பயணங்களின் பகுதியாய் உள்ளது?

நுண்ணறிவும் ஞானவேட்கையும், உடற்கட்டும் வனப்பும் நளினமும் கொண்டு விளங்கும் அழகிய அந்தண குமாரன்.

அவனை நினைத்து தந்தையின் இதயத்தில் நிறைந்த மகிழ்ச்சி, அன்னையின் உள்ளத்தில் பெருமை, தோழன் கோவிந்தன் கண்களில் பேரன்பு.

அறிவு வேட்கை தீராத ஆன்மா அமைதி பெறாத இதயத்தில் அல்லாத சித்தார்த்தன் சமணனாக வேண்டுமென தந்தையிடம் அனுமதி பெறுகின்றான். ஒரு இரவு முழுவதும் நின்ற இடத்தைவிட்டு நகராது கால் நடுங்கிக் கொண்டிருந்தாலும் முகத்தில் யாதொரு நடுக்கம் இல்லாத தேர்ந்தெடுத்த பாதையை அடைய வேண்டும் என்ற அவனின் உறுதி என்னை வியக்க வைக்கிறது.

சமணர்களிடம் பல சித்திகள் பெற்று தன்னைத் தானே வருத்திக் கொள்வதன் மூலம் தொல்லைகளை வென்று, நான் என்ற எண்ணம் அழிந்து பலமுறை கிடந்தான். இருப்பினும் அவன் ‘‘நான்’’ ஆகி ‘‘சித்தார்த்தன்’’ ஆகி உயிர் இயக்க சுழற்சியின் சுமை தாங்காமல் துன்பம் பல உணர்ந்து ஞானத்திற்கு தொலைவில் இருப்பது போல உணர்ந்து, சமணத்தை விட்டு விலக முடிவு செய்தான். தன் ஆசிரியரையே மயங்கச் செய்து, அவர் சித்த உறுதியை வென்று தன் விருப்பப்படி நடந்து கொள்ளுமாறு சித்தார்த்தன் தனது சித்த உறுதியைப் பயன்படுத்தினான். கௌதம புத்தரைக் கண்டு, அவரின் போதனைகளைக் கேட்டபின், புத்தரிடம் ‘‘தாங்கள் பெற்ற ஞானத்தை சொற்களாலும் உணர்வுகளாலும் உணர்த்த முடியாது. எனவே நான் என் வழியிலேயே போகிறேன்’’ என்றான் சித்தார்த்தன்.




பின்பு சித்தார்த்தன் இனி ‘‘ஆத்மாவைக் கண்டு அஞ்சாமல் அவனுக்கே அவன் மாணவனாய், அவனுள் சித்தார்த்தனின் ரகசியத்தை கண்டறிவேன்’’ என்று முடிவு செய்தான். அவனைச் சுற்றியுள்ள யாவும் அழகாய்த் தோன்றியது.

ஒரு நாள் கமலா என்ற பெண்ணின் அழகில் மதி மயங்கினான். அவளின் வீட்டிற்குள் செல்ல வேண்டுமென தன் சமண அடையாளங்களைத் துறந்து அவளைப் பார்த்து பேசினான்.

தனக்கு ஆசிரியராய் இருந்து பாடம் கற்பிக்க வேண்டும் என்று வேண்டினான். கமலாவும், ஆடைகள், பாதரட்சைகள், பணத்துடன் வந்தால் கற்றுக்கொள்ளலாம் என்றாள்.

சித்தார்த்தனின் நோக்கமென்பது ஒரு கல்லை கடலில் வீசினால் அது எப்படி அடி மட்டம் வரை செல்கிறதோ, அது போலதான் என்றான். பின் வர்த்தகர் காமஸ்வாமியிடம் வேலைக்கு சேர்ந்தான். நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் கமலாவின் காதலனாய், நண்பனாய், சீடனாய் விளங்கினான். காமஸ்வாமி ஏதேனும் காரியம் கெட்டுவிட்டது என்றாலும் கண்டு கொள்ளமாட்டான். எல்லோரையும் ஒன்றாக நடத்தினான். ''நான் அடைந்த பெருங்காதலன் நீயே! என் முதுமையில் உன்னிடமாக ஒரு மகவைப் பெறுவேன். நான் உன்னைப் போன்றவள்'' என்றாள் கமலா.

சித்தார்த்தன் செல்வங்களை ஆசைகளை அதிகாரத்தை அனுபவித்தான். இரவைத் தன் வீட்டில் கழித்தான் சித்தார்த்தன். பின்பு பயனற்ற முறையில் தன் வாழ்க்கை கழிந்துவிட்டது போல் தோன்றியது. அவன் தன் அரண்மனை போன்ற வீட்டை விட்டு நீங்கினான். கமலாவோ அவனைப் பற்றி நினைத்த பொழுது, கூண்டில் அடைத்து வைத்திருந்த பறவையை பறக்கவிட்டாள்.

ஒரு நாள் புத்த பிக்குவாக மாறிய தன் நண்பன் கோவிந்தனை சந்திக்கிறான், நடந்த அனைத்து நிகழ்வுகளையும் கூறிவிட்டு, ''சித்தார்த்தன் உருமாறுகிறவன் – ஒரு இளைஞன் –ஒரு குழந்தை – புது சித்தார்த்தன்'' என்றான்.



ஒரு ஆற்றின் அருகிலேயே தங்கிவிடலாம் என்று முடிவு செய்கிறான். அங்கே தான் தோணிக்காரன் ஒருவன் இதற்கு முன்பு ஆறு கடத்தினான். அவனை அந்த ஆறு கவர்ந்தது. அவனும் அதனை மிகவும் விரும்பினான். இது எப்படி என்று சித்தார்த்தன் வினவியபொழுது ''ஆற்றின்

மருங்கில் தங்குவாய்; அதனிடம் கற்றுக் கொள்வாய்'' என்றான், தோணிக்காரனான வாசுதேவன்.

அங்கு சித்தார்த்தனிடம் வாசுதேவன் ''ஆறுக்கு நிகழ்காலம் என்ற ஒன்று தான் உண்டு, கடந்த காலத்தின் நிழலோ, எதிர்காலத்தின் நிழலோ அதன் மேற்படுவதில்லை'' என்றான்.

புத்தர் பரிநிர்வாணம் அடையக்கூடுமென அனைத்து மக்களும் அவ்வாற்றினை கடந்து சென்றனர். அங்கே கமலாவும் கையில் தன் மகனுடன் வந்திருக்கிறாள் என்பதை சித்தார்த்தன் கண்டு கொண்டான். அவள் உயிர், பாம்புத் தீண்டவே பிரிந்தது. சித்தார்த்தனின் மகன் பல நாட்கள் அங்குத் தனியே கழித்துவிட்டுத் தந்தையின் மீது வெறுப்பு கொண்டு ஆற்றைக் கடந்து துடுப்பையும் உடைத்துவிட்டுச் சென்றான். இந்தக் காயம் சித்தார்த்தனுக்கு பல நாட்கள் கடுத்தது. ஒரு நாள் வாசுதேவனுடன் சேர்ந்து ஆற்றின் குரலைக் கேட்டான் சித்தார்த்தன். அப்பொழுது அவனுக்கு தன் தந்தையின் உருவம், பிள்ளையின் உருவம், கமலா கோவிந்தன் ஆகியோரது உருவம் தெரிந்தது. ஆற்றிலிருந்து ''ஓம்'' எனும் ஓங்காரம் ஒலித்தது.

அதுமுதல் சித்தார்த்தன் தன் விதியை எதிர்த்துப் போராடுவதை விட்டான், நிர்வாணம் பெற்றான். வாழ்வெனும் வெள்ளப்பெருக்கில் அனுதாபமும் பரிவும் தோய பெருக்குடன் அறிவின் அமைதி பொலிந்தது.

கோவிந்தனைச் சந்தித்தான் சித்தார்த்தன். கோவிந்தனிடம் ''ஞானி ஒருவன் பிறருக்கு வழங்குகின்ற ஞானம், பேதைமை போலவே காணப்படுகிறது. காலம் உண்மையல்ல. உண்மையிலும் அதன் எதிர்மறையும் அவ்வளவு உண்மை. கொள்ளைக்காரனிலும் சூதனிலும் புத்தர் நிலவுகின்றார். தியானத்தின் மூலம் காலத்தை விலக்கலாம். எண்ணங்கள் எதற்கும் பெருமதிப்பு கொடுப்பதில்லை, பொருளுக்கே பெருமதிப்பு கொடுக்கிறேன்.'' என்றான்.

கோவிந்தன் ''நண்பா! நீ சாந்தி எய்தி விட்டாய் என்பதை நான் பார்க்கிறேன்'' என்றான். சித்தார்த்தனின் முகத்தில் நீண்ட வரிசையான முகங்கள் யாவும் வந்து மறைந்தன. அமைதியாகவும் மென்மையாகவும், ஒரு வேளை எள்ளியும் அந்த புத்தர் புன்முறுவல் செய்தது போலவே முறுவலித்தார்.

தன்னுடைய வாழ்வில் புனிதமும் பொருளும் உடையதாக விளங்கும் ஒவ்வொன்றையும் நினைவூட்டி அசைவற்று வீற்றிருக்கும் அம்மனிதனுடைய திருமுன்னர், தரையில் நெடுங்கிடையாக வீழ்ந்து தாழ்ந்து பணிந்தான் கோவிந்தன்.

**ஜெயசங்கரி**
இரண்டாமாண்டு

# அம்மா

இந்த தலைப்பைப் பார்த்தும் பல பேர் மனதில் நினைப்பது, இந்தத் தலைப்பில் எப்பவும் போல் இருப்பது தானே என்னப் புதுசாக இருக்கப் போகிறது அப்படியென்று. இதையும் ஒரு முறைப் படித்து பாருங்கள், எண்ணங்களின் ஒரு சிறு வெளிப்பாடு.

“கோடி உறவு அருகில்
இருந்தாலும் அம்மாவை மிஞ்சின
உறவேதும் உலகில் இல்லை.”



இந்த கவிதையின் அர்த்தத்தின்படி, எனக்கு தோன்றும் ஒரு நிகழ்வு. நமக்கு உடல்நிலை சரியாக இருக்கும் போது நம் எதையும் பொருட்படுத்த மாட்டோம். இதுவே நமக்கு உடல்நிலை சீராக இல்லையென்றால் நாம் முதலில் நினைப்பதோ, ஏங்குவதோ, தவிப்பதோ அம்மாவின் அன்பிற்கு மட்டுமே. ஏனெனில், அம்மாவின் அன்போ, அரவணைப்போ நம் மனதில் இருக்கும் குழப்பத்தையும் கவலையையும் குறைக்கும் இயற்கை மருந்து.

எல்லாப் பெண் குழந்தைகளும் ஒரு தடவையாவது தன்னோட அம்மாகிட்ட கேட்டிருப்பாங்க ஏன் அம்மா! தம்பி, அண்ணன் அவங்களுக்கு மட்டும் அவ்வளோ சாதகமா இருக்க அப்படின்னு.. அப்பாகிட்ட பெண் குழந்தைகள் மிகவும் நெருக்கமாக இருப்பதைப் அப்பாக்கு அவ்வளோ செல்லமா இருக்கா அப்படின்னு...

ஏன் இத இப்போ சொல்றேன்னா! அம்மாவிடம் மட்டுமே அனைத்து பிள்ளைகளும் உரிமையாக எதையும் கேட்க முடியும். அதுவே அம்மாவின் அன்பு.

“ஆயிரம் தான் கவி சொன்னேன்
அழகா அழகா பொய் சொன்னேன்
கத கதனு களி கிண்டி
களிக்குள்ள நல்லெண்ண கலந்து....
கருப்பட்டி நல்லெண்ண கலந்து தருவாயே...

என்று கவிஞர் வைரமுத்து தன் அம்மாவை நினைத்து, தன் சிறு வயது நினைவை நினைத்து, தன் அம்மாவுடன் இருந்த நாட்களை நினைத்து மகிழ்கிறார். அந்த காலத்தில் ஆடம்பரமாக

வாழாவிட்டாலும் அன்போடும் ஆனந்தத்தோடும் வாழ்ந்த வாழ்க்கை கண்களில் நீரை நிரம்பச் செய்கிறது.

எனக்கு பிடித்த பாடல்களுள் சில...
ஓ... அம்மா அம்மா அம்மா நீயே...
அன்பின் உருவம் நீயே...
உலகில் உலகில் உன் போல் சொந்தம்...
யாரும் இல்லையே ...
அம்மா ஐ லவ் யூ...
என்னை என்னை கொஞ்சி
பார்க்கும் அழகே உன்னை உன்னை கொஞ்சி தீர்க்கவா
எந்தன் கையில் இன்று நீயும் குழந்தை போல மாறிட வா...

எனக்கு என்னோட அம்மாகிட்ட இந்த பாட்டு பாடணும், ஏனென்றால் இந்த உலகில் தன் அம்மாவிடம் அவர்களை பத்தி அவர்களிடம் புகழ்ந்து கூறியது மிகவும் குறைவு. அம்மாவின் அருமை அவர் நம்முடன் இருக்கும்போது தெரியாது. அவர் தொலைவில் இருக்கும் போது மட்டுமே அவரின் அன்பு புரியும்.

நாம் நம்ம வீட்டில் எந்த ஒரு சின்ன விஷயத்திற்கும் அம்மாவையே அழைப்போம், ஒரு தெய்வத்திற்கு நிகரான அன்பு தெய்வம் அம்மா மட்டுமே. யார் ஒப்புக்கொண்டாலும் எனது கருத்து; அம்மாவின் அன்பிற்கு நிகர் இன்னும் இவ்வுலகில் நிகழ்த்தப்படவில்லை ...

"வாழ்க்கையில் அனைவரிடமும் கிடைக்காத சொத்து!
அனைவருக்கும் கிடைத்தும் அவர்களால்
நினைத்துப் பார்க்க முடியாத ஒரே சொத்து!
அருகில் இருக்கும் வரை அருமை தெரியாது
தொலைவில் இருக்கும் போது ஏங்க வைக்கும்
தன்மை கொண்ட அன்பு அம்மாவின் அன்பு"
கடைசியில்,
அள்ள அள்ள குறையாதது எது?
அமுதசுரபியா...?
இல்லை, அகிலமே போற்றும்
"அம்மாவின் அன்பு"

எல்லா அன்பும் அம்மாவின் அன்பிற்கு ஈடாகாது. எல்லா அன்பின் வண்ணமும் வானவில் போல் வருமா என்றால் தெரியாது. ஆனால் அம்மாவின் அன்பிற்கு அம்மா மட்டுமே நிகர்

**தேவதர்ஷினி – பானு**



# கம்பர்



# முத்தமிழ்

முத்தமிழே!
எழுத்துக்களின் கோர்வை எதிர்கால இலக்கியமானது!
என் உணர்வுகளின் கோர்வை எதிர்பாரா கவியானது!
எம் மனக்குரல்கள் இன்று மாறாத சுவடானது!
என்னுள் உறைந்த நினைவுகள் இன்று காவியமானது!
என் சீண்டல்களும் புன்முறுவல்களும்...
காற்றில் நீங்காத இசையானது!
என் கனவுகள், சிறகை விரித்து
வானில் பறக்கிறது உன்னால்!
உம் வருகையால்...!
இயலாய், இசையாய், நாடகமாய் !
நீ தந்த வர்ணனைகள், வாழ்வுக்கு இனிதானது!
வாழ்வு முழுமைக்கும் போதுமானது...!
உன்னுடன் பயணிக்க தொடர் ஆவலுடன்,

என்றும்...!

**அபிநயா**
முதலாமாண்டு

# அறியப்படாத தீவின் கதை




"அறியப்படாத தீவின் கதை" கண்டறியப்படாத தீவு ஒன்றை கண்டுபிடிக்கதற்காக படகு கோரி அரசனிடம் வரும் ஒரு மனிதனை மையமாகக் கொண்டு இந்நாவல் நகர்கின்றது. நமது எண்ணமும் சிந்தனையும் இருப்பதை வைத்து திருப்பதியடைதல் என்ற குறுகிய வட்டத்தில் முடங்கிவிடாமல் புதியவற்றைத் தேடுவதில் விருப்பம் கொண்டவர்களாக இருத்தலின் அவசியம் குறித்தும் ஆராய்கிறது.

அனைவருக்கும் இயல்பாக விதிக்கப்படும் கட்டளைகளை பின்பற்றுவதும் அவசியம், ஆயினும் உரிமை மறுக்கப்படும் சமயத்தில் போராடிப் பெறுவது சாலச் சிறந்தது. அப்போரட்டத்தின் போது நிராகரிக்கப்பட்டால், பின்வாங்காமல் வெற்றிகாணும் வரை மனஉறுதியோடும், பொறுமையோடும், நம்பிக்கையோடும் இருந்தால் எதிர்ப்பது வேந்தனே ஆயினும் வென்று விடலாம் என்று விடாமுயற்சியின் பலனை விவரிக்கின்றது.

தனிமனித போராட்டத்திற்கே அரசன் இணங்குவானாகில், மக்களின் ஒற்றுமை குரலின் பலத்தினை நீங்களே சற்று சிந்தித்துப் பாருங்கள்! ஒரே செயலில் தொடர்ந்து ஈடுபடும்போது சலிப்பு உண்டாவது இயற்கை. ஆனால் அவ்வாறே காலத்தை முடித்தல் என்பது வேண்டாமே! ஏற்ற காலத்தில் கிடைக்கப்பெறும் அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வதில்லேயே மதி விளங்கும் ஒன்றை எதிர்நோக்கி போராடுவதோடு, அதனை உபயோகிக்கும் முறை மற்றும் அடிப்படை தேவைகள் பற்றின புரிதலும் சற்று அவசியம்.


தனது பணி ஒரு துறையைச் சார்ந்து இருப்பினும் மற்ற துறையின் அடிப்படைகளையும் கற்றுக்கொள்வது எதிர்பாராத சமயத்தில் நிச்சயம் உதவும். தாக்குதல் என்ற ஒன்று திடீரென ஏற்பட்ட சமயத்தில் "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் " என்பதனைப் போல தன்னிடமிருக்கும் பொருளைக் கொண்டு அச்சமின்றி செயல்பட்ட பணிப்பெண் பாராட்டப்பட வேண்டியவள். ஆழம் அறியாமல் காலை விடாதே என்பதைப் போல முன்னேற்பாடுகள் இன்றி செயலில் ஈடுபடுதல் கூடாது. தெளிவான திட்டமிடல் அவசியம். அனைத்து மனிதர்களும் இந்த வாழ்க்கையும் வாழ்க்கையில் உள்ள அறியப்படாத தீவு எனும் தத்துவத்தை முன்வைக்கும் சிறந்த படைப்பு என்பது காலத்தால் மறுக்க இயலாத உண்மை.

**அபிநயா**


முதலாமாண்டு

# சமநிலை

அகமும் புறமும் சமநிலை மறந்தால்
ஆணவத்தில் அழிவது இயல்பே!
இரவும் பகலும் சமநிலை துறந்தால்
இல்லாமல் போவது உலகே!
பிறப்பும் இறப்பும் சமநிலை குலைந்தால்
பிரபஞ்ச இயக்கம் நடுக்கமே!
அகடும் முகடும் சமநிலை செய்தால்
அற்பமாய் திகழும் சிற்பமே!
வெற்றியும் தோல்வியும் சமநிலை அறிந்தால்
வெல்லும் உலகம் உன்னாலே!
உற்பத்தியும் நுகர்வும் சமநிலை அழிந்தால்
வாழ்க்கைச் சங்கிலி யுத்தமே!
நீரும் நிலமும் சமநிலை தவிர்த்தால்
நிலைகுலையும் மனித வாழ்வே!
கடலும் வானும் சமநிலை கவிழ்ந்தால்
கதறிடத் தோன்றும் தன்னாலே!
தாயின் மொழியின் சமநிலை கொண்டே
தலைமுறைகள் துளிர்க்குது தரணியிலே!



**தினேஷ்**
இரண்டாமாண்டு


G.S. Jeya Gayathiree
BVV21016
BVSc. AH
1st Yr.

# விழிமழை




அவளைக் கண்ட முதற்கணம் – பொங்கிடும்
ஆற்றாத விழிகளோடு திரும்பினாள்!
நாழிகையும் சாமமாகி – பொழுதோடும்
அயனமும் வட்டமானதோ?
எப்போதும் இயக்கத்திலிருக்கும் கால்கள் – நிலைத்திடும்
அப்போது வேரூன்றி
மின்னலென சட்டெனத் திரும்பி – பறந்தோடும்
மின்மினிப்பூச்சியாய் மறைந்தாள்
வேரூன்றிய விரலிடுக்கில் – பாய்ந்தோடும்
கனமழைப் பெரு வெள்ளமாய்
கனமழையில் குடைவிரிக்க மறந்தேன் – வழிந்தோடும்
கார்மேக மழையில் நனைந்தே!!!

**பெல்சியா ஸ்நொலெட்**
**ஸ்ரீமதி**
இரண்டாமாண்டு


# வியக்க வைக்கும் உண்மைகள்

## வித்தியாசமாக தூங்கும் விலங்கு



இந்த உலகில் வித்தியாசமாக தூங்கும் பண்பு கொண்ட விலங்கு டால்பின்கள். இவை ஒரு கண்ணைத் திறந்தும் மறு கண்ணை மூடியும் வைத்துக்கொண்டு வித்தியாசமாக தூங்கும் திறன் பெற்றது. இரண்டு கண்களையும் மூடி உறங்கினால் அது மூச்சுத் திணறி இறந்து விடும். ஏனென்றால் நம் மூளை போன்று அவற்றின் மூளை தன்னிச்சையாக செயல்படாது. அப்படியே இரண்டு கண்களை மூடினால் மூளை செயலிழந்துவிடும்.

## ஈர்ப்பு விசை இல்லாத இடம்



கனடா நாட்டில் ஹட்சன் பே என்னும் இடத்தில் உலகில் எங்கும் இல்லாத அளவிற்கு மிகவும் குறைவான ஈர்ப்பு விசை இருக்கிறது. இதற்கான காரணம் அங்குள்ள பனிக்கட்டி உருகியதால் பூமியின் நிறையில் சிறிய மாற்றம் ஏற்பட்டு ஈர்ப்பு விசை குறைந்துள்ளது.

## பச்சை இரத்தம்




நம் உடலில் வரக்கூடிய இரத்தமானது கடல் ஆழத்தில் பச்சை நிறத்தில் காணப்படும். இதன் காரணம் கடலில் 30 அடிக்கு மேல் சிகப்பு நிற ஒலிகள் ஊடுருவி செல்வதில்லை. இதன் காரணமாக நமது இரத்தமானது நம் கண்களுக்கு மட்டும் பச்சை நிறத்தில் தெரியும். ஆனால் உண்மையில் கடலுக்கடியிலும் இரத்தம் சிவப்பாகத்தான் இருக்கும். நம் கண்களின் மாயை காரணமாக நமது இரத்தமானது பச்சை நிறத்தில் தோன்றுவதுபோல் தோன்றும்.

## இரவே இல்லாத நாடு



ஐரோப்பாவின் வடக்குப் பகுதியான நார்வேயில் ஏப்ரல் – ஆகஸ்டு மாதம் வரை 5 மாதங்களுக்கு சூரியன் மறைவதே இல்லை. அதாவது இரவே கிடையாது ஏனெனில் இது ஆர்டிக் பகுதிக்கு மிக அருகில் உள்ளது. இதன் காரணமாக பூமி சுழன்றாலும் கூட இதன் அச்சில் எந்தவித மாற்றமும் இருக்காது. கோடைக்காலத்திலிருந்து அந்த நாட்டில் சூரியன் 24 மணிநேரமும் காணப்படும்.



## அமைதி அமைதி

இந்த உலகத்தில் சத்தமே இல்லாத அமைதியான இடம் என்று எந்த ஒரு இடமும் கிடையாது. நீங்கள் அமைதியான இடம் என்று கருதக்கூடிய இடங்களில் கூட துளி அளவிலாவது கண்டிப்பாக சத்தம் இருக்கும். இந்த உலகத்தில் 100% அமைதியான இடம் இல்லாவிட்டாலும் மிகவும் அமைதியான இடம் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைமையகத்தில் உள்ள **"The Quiet Room"** (அமைதி அறை) தான் மிகவும் அமைதியான இடமாகும். இதன் டெசிபல் 20.35 ஆகும்.



## மேகத்தின் எடை

ஒரு மேகத்தின் எடை சராசரியாக 1.1 மில்லியன் பவுண்டுகள் ஆகும். அதாவது ஒரு மேகத்தின் எடை சராசரியாக 100 யானைகளின் எடைக்கு ஈடானதாகும்.



## இறப்பே இல்லாத உயிரினம்

**"Jelly Fish"** என்ற மீனுக்கு இறப்பு என்பதே கிடையாது. இதனை கடலை விட்டு வெளியே எடுக்கும் வரை இறப்பு இதற்கு வரவே வராது.



## முயல் தீவு

ஜப்பானில் முயல்களால் நிரம்பிய ஒரு தீவு உள்ளது. இந்த தீவு இரண்டாம் உலகப் போரின்போது சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட இரசாயனங்கள் விஷ வாயு போன்றவற்றை சோதிக்க ஒரு இராணுவத்தளமாகப் பயன்படுத்தப்பட்டது. அதன் பிறகு விஷத்தின் விளைவுகளை சோதிக்க இராணுவம் முயல்களைப் பயன்படுத்தியது என்று கூறப்படுகிறது, இதன் விளைவாக இன்று நூற்றுக்கணக்கான முயல்கள் தீவு முழுவதும் சுற்றித் திரிந்து பெரிய சுற்றுலாத் தலமாக உள்ளது.



## உலகின் விலையுயர்ந்த பாலாடைக்கட்டி

உலகின் விலையுயர்ந்த பாலாடைக்கட்டி ஆனது கழுதையின் பாலில் இருந்து தயாரிக்கப்படுகிறது.



## ஹிட்லரையே அதிரவைத்த விலங்கு

உலகையே அதிரவைத்த ஹிட்லர் ஒரே ஒரு விலங்கைப் பார்த்தாலே கொலை நடுங்கி விடுவாராம் அது புலியோ, சிங்கமோ

இல்லை. அது ''பூனை'' பூனைகளைப் பார்த்தால் பயப்படும் ''Ailruophobia'' என்ற நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

### ஷாம்பு என்கிற வார்த்தை உருவான நாடு

ஷாம்பு என்கிற வார்த்தை உருவான நாடு இந்தியா. ஷாம்பு இந்தியாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியர்கள் மூலிகைகளை பயன்படுத்தியுள்ளனர். அதற்கு ''ஷம்பு'' எனப் பெயர் வைத்துள்ளனர். அதுவே பிறகு ஷாம்பு என்றானது.

### வலிமையான தசைப்பகுதி

நம் உடலில் உள்ள மிகவும் வலிமையான தசைப்பகுதி நமது கையோ கால் பகுதியோ அல்ல, நாக்குதான். ஏனெனில் இதுதான் நம் உடலிலேயே புவி ஈர்ப்பு விசைக்கு எதிராக செயல்படக்கூடிய ஒரே தசை அது மட்டுமின்றி பாக்டீரியாக்களை அழிக்கும். காரமான குளிர்ச்சியான உணவுகளை எடுத்துக்கொண்டாலும் நாக்கிற்கு பாதிப்புகள் அதிகளவில் ஏற்படுவதில்லை.



**ஹரிதா**

முதலாமாண்டு

# ஆங் சான் சூச்சி



இத்தலைப்பைப் பார்த்தவுடன் நம்மில் பல பேருக்குப் புரியாமல் இருக்கலாம். ஆம், இவ்வுலகில் போராளிகள் பலர் இருக்கிறார்கள் ஆனால் அவர்களில் அறிமுகமானவர்கள் சிலரே. நெல்சன் மண்டேலாவை பற்றித் தெரிந்த நமக்கு மியான்மரின் பெண் போராளியான ஆங் சான் சூச்சியை தெரியாமல் போயிருக்கலாம்.

சூச்சி ஜுன் 19,1945 ஆம் ஆண்டு ரங்கூனில் பிறந்தார். இவரின் இரண்டாவது அகவையில், 1947 ஆம் ஆண்டு அவரது தந்தை செனரல் ஆங் சான் படுகொலை செய்யப்பட்டார். பின் 1948 ஆம் ஆண்டு எகிப்திடமிருந்து மியான்மர் விடுதலையானது. தன் கல்வியை இந்தியாவைத் தொடர்ந்து பிரித்தானியாவிலும் பின் அமெரிக்காவிலும் நிறைவு செய்தார்.

1972 ஆம் ஆண்டு திபத்திய, பூட்டான் பண்பாட்டு ஆய்வாளரும் அறிஞருமான மைக்கேல் ஏரிசு என்பவரை மணந்தார்.

1988 ஆம் ஆண்டு மியான்மருக்குத் திரும்பிய அவர் 1988 செப்டம்பர் 27 இல் உருவாக்கப்பட்ட மக்களாட்சிக்கான தேசிய அமைப்பு (National League for Domocracy) இன் பொதுச் செயலாளராக பதவியேற்றார். பின் ஆங்சான் சூச்சி அரசியல் களத்தில் தீவிரமாக களமிறங்கி இராணுவ அடக்குமுறைக்கெதிராகப் போராடினார். இதைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு இவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். அந்த ஜனநாயகப் பறவை கூண்டில் அடைக்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்துவிட்டன. அவர் சிறையில் இருந்தாலும் மியான்மரில் சுதந்திரக் காற்றுக்காக அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு அடக்குமுறைகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

1990 மே 27 இல் நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சி பெரும்பான்மையைப் பெற்றிருந்த போதிலும் இராணுவ ஆட்சியாளர்கள் அவரது கட்சியினை ஆட்சிப் பீடத்தில் ஏறவிடாது தடுத்துவிட்டனர். ஜூலை 20, 1980 முதல் நவம்பர் 10, 2010 வரையிலான 21 ஆண்டுகாலத்தில் 15 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஆங் சான் சூச்சி மியான்மர் நாட்டில் பிறக்காதவர் என்ற காரணத்தினால் மியான்மர் அரசின் தலைமை ஆலோசகராக மட்டுமே செயல்பட அனுமதிக்கப்பட்டார்.

மேலும் 22 ஆண்டுகள், 2011 ஆண்டு முடியும் வரை இராணுவம் மியான்மரில் ஆட்சி செலுத்தியது. 2011 முதல் 2015 வரை மியான்மர் நாட்டில் அரசியல் மாற்றங்கள் உருவாகத் தொடங்கியது. பின் மியான்மர் நாடாளுமன்றத்திற்கு 2015 – இல் பொதுத் தேர்தல் நடைப்பெற்றது. இத்தேர்தலில் ஆங் சான் சூச்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கட்சி பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றியது. இருப்பினும் இராணுவத்தினர் ஆட்சியில் முக்கியமான துறைகளை தங்கள் வசம் எடுத்துக் கொண்டனர். ஆங் சான் சூச்சி மியான்மர் அரசின் தலைமை ஆலோசகராக மட்டும் பதவியில் இருந்தார்.

8 நவம்பர் 2020 இல் நடைபெற்ற 2020 மியான்மர் பொதுத்தேர்தலில் ஆங் சான் சூசியின் தேசிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றத்திற்கான மொத்தமுள்ள 476 தொகுதிகளில் 386 தொகுதிகளைப் (83%) கைப்பற்றியது. மியான்மர் நாட்டின் ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்கான கட்சி வெறும் 33 தொகுதிகளை மட்டுமே வென்றது. எனினும் ஆங் சான் சூச்சியின் தேர்தல் வெற்றி மோசடியானது என இராணுவத்தினரினர் குற்றம் சாட்டி மியான்மர் நாட்டில் 1 பிப்ரவரி 2021 அன்று இராணுவம் புரட்சி மூலம் நாடாளுமன்றத்தை முடக்கியும் நெருக்கடி நிலையை அறிவித்தது.

இதனால் பொதுமக்கள் இராணுவத்திற்கு எதிராக அணி திரண்டு நாடு முழுவதும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. 3 மார்ச் 2021 வரை இராணுவத்தால் போராட்டக்காரர்கள் வீட்டுக்காவலில் இருக்கிறார். மியான்மரில் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. சூச்சீ 1990 இல் ராப்டோ பரிசு, சாக்கரோவ் பரிசு மற்றும் நோபல் பரிசு (1991) ஆகியவற்றைப் பெற்றார். ஐரோப்பிய

யூனியன் அமைப்பின் சார்பில் வழங்கப்படும். மனித உரிமைகளுக்கான சக்காரோவ் விருது 1990 ஆம் ஆண்டு ஆங்சான் சூச்சிக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டாலும் அக்காலகட்டத்தில் இவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்ததால் அதை பெற இயலவில்லை.

சுமார் 23 ஆண்டுகளுக்கு பின் அவ்விருதினை 2013 இல் ஆங் சான் சூசி பெற்றுக் கொண்டார். 1992 இல் இந்திய அரசின் ஜவஹர்லால் நேரு அமைதிப் பரிசைப் பெற்றார். 2007ல் கனடா அரசு இவரை அந்நாட்டின் பெருமைமிகு குடிமகனாக அறிவித்தது. இப்படி அறிவிக்கப் பெற்றுப் பெருமை பெற்றவர் இவரே ஆகும்.

மக்களாட்சி நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன் தம்மை ஆளும் நாட்டில் இராணுவ ஆட்சியால் சூழ்ந்த ஒரு நாட்டைப் பார்க்கும்போது வியப்பாக இருக்கலாம். அந்த கொடூரமான இராணுவ ஆட்சியை எதிர்த்து போராடிய பெண் பற்றியும், அவர் போராடியதனால் அவர் பெற்ற தண்டனைகளையும் பார்த்தோம். 2022 ஆம் ஆண்டில் கூட இவ்வாறான நிகழ்வுகள் ஆங்காங்கே நிகழ்கின்றன.

தன் நாட்டிற்காக 27 ஆண்டுகள் சிறைவாசத்தை அனுபவித்த நெல்சன் மண்டேலாவை நினைவுக்கூறும் நாம், தம் அண்டை நாடான மியான்மரில் போராடி வீட்டுக்காவலில் இருக்கின்ற பெண் போராளியான ஆங் சான் சூச்சியைப் பற்றி அறிய மறந்து விட்டோம். தற்போது வரை தம் நாட்டிற்காக இராணுவ ஆட்சியை எதிர்த்து போராடுகிறார். தற்போது மியான்மர் நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெற்று வந்தாலும், தன் நீண்ட கால போராட்டத்தினால் மியான்மரை மக்களாட்சி நாடாக (சில ஆண்டுகள்) மாற்றினார்.

அதனால் பல நாடுகள் இவரை அடையாளம் கண்டுக்கொண்டு பல உயரிய விருதுகளை இவருக்கு கொடுத்து சிறப்பளித்தது. இவர் வெளியுறவுத்துறை அமைச்சராக 30 மார்ச் 2010 முதல் 1 பிப்ரவரி 2021 வரை செயல்பட்டார்.

தன் வாழ்க்கையையே தன் நாட்டிற்காக அர்ப்பணித்து போராடிவரும் ஆங் சான் சூச்சியை பற்றி நாம் அனைவரும் தெரிந்துக் கொள்ள வேண்டும். எந்த ஒரு வன்முறைக்கும் இடமில்லாமல் இருக்கும் இந்தியா போன்ற நாடுகளும் இவ்வுலகில் இருக்கின்றன. மியான்மர் போன்ற நாடுகளும் வன்முறையால் பல உயிர்களைக் கொன்ற (ரஷ்யா, உக்ரைன்) போன்ற நாடுகளும் இவ்வுலகில் இருக்கின்றன.

இளைய சமுதாயமான நாம் இவ்வுலகில் நம்மால் இயன்ற வரை அமைதியை நிலைநாட்ட வேண்டும். அனைத்து நாடுகளும் மக்களாட்சி முறையை பின்பற்றுவது சாத்தியமற்றது எனினும் நம்மால் இயன்ற வரை அமைதியை நிலைநாட்டுவோம். தன் 75 ஆவது அகவையிலும் வீட்டுக்காவலில் இருந்து தன் நாட்டிற்காகப் போராடிவரும் ஆங் சான் சூச்சியைப் போன்று மனவலிமையை வளர்த்து நம் வாழ்க்கையில் போராடி வெல்ல வேண்டும். நம் தாய் நாடான இந்தியாவை உலகிற்கே

முன்னோடியாக மாற்ற வேண்டிய கட்டாயமும் கடமையும் இன்றைய தலைமுறையான நமக்கு உண்டு என்பதை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

பல குற்றச்சாட்டுகளால் ஆங் சான் சூச்சியை பல முறை வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் போதிலும் துவண்டு விடாமல் தன் நாட்டின் இளைய தலைமுறைக்காக போராடி வருகிறார். நம் நாட்டின் தேசியத் தலைவர்களைப் பற்றி மட்டுமே அறிந்துகொள்ளாமல் மற்ற நாட்டின் ஆட்சிமுறை, தலைவர்கள் பற்றியும் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

மற்ற நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ள முயற்சி செய்யும்போது தான் நம் தாய் நாடான, “இந்தியாவின் மண்ணைத் தொட்டு கும்பிடத் தோன்றுகின்றது.” போதும் என்ற அளவிற்கான சுதந்திரத்தை நாம் அனுபவித்து வருகின்றோம். அதற்கு காரணம் நம் விடுதலை போராட்ட வீரர்கள் மட்டுமே ஆவார்கள். அவர்களுக்கு மரியாதை செலுத்துவோம்! தலை வணங்குவோம்!

**ஹரிதா**

முதலாமாண்டு



**தமிழரசி**

முதலாமாண்டு

# தஞ்சைப் பெரிய கோவில்

அகிலம் அறியும் ஆயிரம் ஆண்டு அதிசயம்
ஒருமுறையேனும் அதனைப் பார்ப்பது அவசியம்
சோழனின் கலைத்திறன் தோற்கவில்லையே
இதற்கு நிகராய் நிற்க ஏதுமில்லையே
தொழில்நுட்பம் அறியாத காலத்திலேயே
தொழிலில் நுட்பமாய் இருந்ததில் ஆச்சரியமில்லையே
சாட்சியாய் நிற்கிறது அதிசயமே
பேரழிவிற்கும் அழியாமல்
கட்டிடக்கலை புரியாமல்
ஆராய்ச்சியாளர்களுக்கும் விளங்காமல்
நின்றதே நிலையாய்
தஞ்சையின் புகழாய்...!
உலகின் புதிராய்!
இங்கு வென்றது
சோழனின் பெருமையன்றோ?
தமிழின் பெருமை!
தமிழனின் பெருமை!

**கயல்விழி**
முதலாமாண்டு



# சித்திரமதி

ஏழு எட்டு ஆகிறப்போ
என்னென்ன தெரிந்திடுமோ
எட்டிடாத புத்திக்குத்தான்
ஆள் ஆனப்பின்னே
நாலு எட்டு எடுத்து வைத்து அவநடக்க
சலங்கையொலி கேட்டிடும் முன்
வீதிச்சேறு மேனித்தொடும்.
கொஞ்சும் மழலை
மிஞ்சும் அழகு அதன்
சின்னஞ்சிறு சிறகினை சிறகடிக்கும்
முன் சீக்கிரம் வெட்டுவதேன் இச்சமூகமே.
வன்புணர விதியொன்று இல்லையோ
வஞ்சகனே?
கன்னியவள் கனவுகளைக்
களைக்கும் கொடூரனே,
அற்பமொழி அமிலமாய்ப் பெய்ய
அவள் என்ன செய்வாள்? ஒருமுறை
பிறந்தும், பலமுறை இறந்தும் கிடப்பாள்.
பொல்லாத உலகில்
சொல்லாத வலியில்
தீராத அன்பை வேண்டி ஏங்கும் மலர்
மாய கண்ணனின் அழகான மனதை
காதல் செய்வாள்.
பின் தீதறிந்து தான் துவண்டு
தனியே தவிப்பாள்.
நகையொன்றைக் கொண்டே
நடைபிணமாய் வாழ்வாள்.
கண்ணீரைக் கொண்டு கழுவினால்
கறைபோகும், பேர்போகுமா?
மெய்யுணர்ந்து
உயிர் பிரிந்த மெய்
உலாவரும் உருவமாய்.

**ரோகினி**
முதலாமாண்டு





# மழை

பெரும்போர் வீரர்கள் அணிவகுத்து செல்ல
கரும் போர் வீரர்கள் அதை எதிர்த்து கொள்ள
படை இரண்டும் மோதிவிட தடுப்போ ஒலியைவிட
வாளும் ஒளியைவிட இங்கு வலியே இல்லை
ஆனால் எங்கும் சிதறின உதிரத்துளிகள்
ஆம்! அவை மழைத்துளிகள்!
என்ன மாயமிது
தரையில் செருக்களம் இருக்கவில்லை
ஆம்! வானில் நடக்கிறது யுத்தம்
கீழே விழும்போது வந்த சத்தம்
மண்ணுக்கு தரும் ஆசை முத்தம்
செடியும் கொடியும் வளர்கிறதே
இயற்கை உயிர்க்காக பிழைக்கிறதே!

**ஹர்ஷினி**
முதலாமாண்டு

# எங்கே ?

– சினேகா & ஸ்ரீமதி
இரண்டாமாண்டு



வெற்றிகள் கண்ட போது
பல உறவுகள் இங்கே!
ஒற்றை தோல்வியின் போது
பெற்ற தாய் தந்தை எங்கே?
தவறைக் கண்டிட
ஆயிரம் கண்கள் உண்டு
உள்ள நிறையை பாராட்ட
கண்கள் எங்கே?
திட்டி தீர்க்க நாவுகள் பல
கட்டி அணைக்கக் கைகள் எங்கே?
சிரிப்பின் ஒலியைக் கேட்ட காதுகள் பல
இதயத்தின் அழுகை கேட்ட காதுகள் எங்கே?

# அம்மா...

தாயின் கருவறை சொர்க்கத்தினும் இனிது
அதனை மறுமுறைக் காண்பது அரிது
தன் உதிரத்தை உணவாய் ஈந்து
நம்மை சிகரம் தொட வைக்கும் தெய்வம்
அழுதால் துடிப்பாள், அழகாய்ச் சிரிப்பாள்
தவறு செய்தால் கடிந்து கொள்வாள்
கண் இமைக்கும் நேரத்தில் கனவாய் வருவாள்
எந்திரம் போல நாள் முழுவதும் உழைப்பாள்
ஈன்றெடுத்த தெய்வம் பொறுமையின் சிகரம்
கடவுள் வரம் தந்தால் மறுபிறப்பைக் கேட்பேன்
என் தாயை நான் தாங்கவே
தன் தூக்கம் தொலைந்து
நம்மை தூங்க வைத்த தேவதை
நம் கண்ணீர் துடைக்க துணியாய் வருவாள்
தாயின் கருவறை தீர்க்க முடியா புதிர் அறை
அவள் நேசம் முன் வேசம் தோற்றுப் போகும்



– சினேகா & ஸ்ரீமதி
இரண்டாமாண்டு

# வளைவுகள்



ஆஹா என்ன அழகு!
அவள் உடல் வளைவு!!
ஒவ்வொரு வளைவும்
அவனது கவனத்தை ஈர்த்தது
அனைத்து வளைவுகளையும் அறிந்து
அனுபவிக்க ஆசை கொண்டான்
இந்திய வரைபடத்தைப் பார்த்த
புவியியல் மாணவன்

**பெல்சியா ஸ்நொலெட்**
இரண்டாமாண்டு

# அப்பா



கண்ணுக்குள் மறைந்திருக்கிறது வலி
வியர்வைக்குள் மறைந்திருக்கிறது களைப்பு
உடம்புக்குள் மறைந்திருக்கிறது சோர்வு
உள்ளங்கையில் மறைந்திருக்கிறது உழைப்பு
கால்களில் மறைந்திருக்கிறது வாட்டம்
வெண்முடியில் மறைந்திருக்கிறது துயரம்
உடையில் மறைந்திருக்கிறது ஏக்கம்
சொல்லில் மறைந்திருக்கிறது அனுபவம்
மனதில் மறைந்திருக்கிறது குடும்பம்

**மு.சோபிகா**
இரண்டாமாண்டு

# வீழ்ச்சி



மலையின்
உச்சியிலிருந்து
வீழ்ந்தாலும்
மரணம்
நிகழ்வதில்லை
அருவிகளுக்கு!

**கோ.உ.மோனிஷ்**
முதலாமாண்டு

# வாழ்க்கை

அன்றோ...
சின்னஞ் சிறு கதைகள் பேசி...
சிறார்கள் தெருவெல்லாம்
சூழ்ந்து
வண்ண மழையை ரசித்து...
வானம் பார்த்து வயலில் ஏர்
பிடித்து உழுது
தானும் உணவு
உண்டு...
இராப்பொழுதில்
விழி பார்த்து வழிநின்று
வசந்த முகத்தோடு
வரவேற்று விருந்திட்டனர்.

இன்றோ ...
சிறு கையில் பீடியைப் பிடித்து
வழியெல்லாம் குப்பைகள் மேடேறி...
கும்மிப்பாட்டு மறந்து
கஞ்சத்தில் கசக்கிய நோட்டை
பிச்சையிட்டுப் பெருமை பாடி
வையகத்தை தொலைத்து
செல்பி எடுத்து சேரும் கூட்டங்களில்
வாழ்ந்து தானே ஆக வேண்டும்
என்று எத்தனையோ மக்கள் வாழ...
இப்படியும் வாழலாம் என
படித்துப் படித்து பிடித்துப் பிடித்துப்
புதுமையாக வாழ்க்கையைப் வாழ்வோம்...

**து. கௌரிசங்கர்**
முதலாமாண்டு




BY Tai

# விரிசல்

மாற்றத்தின் மாண்பே
விரிசல்
மேகத்தின் விரிசல்
ஒளி ஒலி
நீரின் விரிசல்
ஹைட்ரஜன் ஆக்சிஜன்
அணுவின் விரிசல்
எலக்ட்ரான் புரோட்டான்
ஆற்றலின் விரிசல்
நிறையும் திசை வேகமும்
விரிசல் என்பது வீணே அல்ல
விரவிக் கிடக்கும் வீரியம்
வீரியம் என்பது அதிசயம்
அதிசயம் என்பது ஆனந்தம்
ஆனந்தம் என்பது
அருட்பெரும் ஆற்றல்




**மௌரியா**
முதலாமாண்டு



# சீறிடு பெண்ணே

சுனாமி வாழ்க்கையில் எதிர் நீச்சல்
அடித்த பெண்ணே!
தேன் உமிழும் குரலில் – இனி
அனலை உமிழ்ந்திடு
உருகும் உன் உள்ளம் இனி
இரும்பாக ஆக்கிவிடு – உன்
கண்களில் ஒளி மிளிரட்டும்
வாழும் விதி என்று பழமைக்குள் அடங்காமல்
தோல்வியைக் கண்டு துவளாமல்
கள்வனைக் கண்டு ஓடாமல்
ரோஜாவின் முட்கள் போல்
பாதுகாப்பு அரணாய் – உன்
வலிமையை வளர்த்துக் கொள்
அகிலம் ஆள்வாய் புரிந்து கொள்
பெண்ணாக பிறந்தோம் என்று
பெருமைக்கொள் !!!

**டி.சதீஸ்**
இரண்டாமாண்டு



# என்றாவது ஒரு நாள்

என்றாவது ஒரு நாள்
சரித்திரம் படைக்க வந்த
சுந்தரியின்
வினாக்கள் விடையளிக்கப்படுமா?
கனாக்கள் காணப்படுமா
மொழிகள் புரிந்து கொள்ளப்படுமா
கலிதீர்த்து நகைக்க முடியுமா
ஆசைகள் அடையப்பெறுமா
அசைவுகள் மதிக்கப்படுமா
காதல் காதலிக்கப்படுமா
மோதல் மெய்யறியப்படுமா
திறமைகள் தேற்றப்படுமா
அறங்கள் ஆற்றப்படுமா
தேடல்கள் முடிவுப்பெறுமா
தடங்கள் தாழ்த்திறக்கப்படுமா...?

**க. அகல்யா**
முதலாமாண்டு

# சன்னல் வழியே!

**ஜெயசங்கரி**
இரண்டாமாண்டு

விழும்போதும் காயப்படாமல்
இருக்க ஆசைப்படுகிறேன்
ஒரு மலராய்!


மேகமாய்
மோகங்களைக் கொண்டு
கண்மணியில்
விண்மீன்களைக் கொண்டு
நிலவினை நித்தம்
மேனியில் சூடி
மின்னலாய்
அவள் வரும்பொழுது
சன்னல் வழிக் காண்பதும்
என் பாக்கியமே!

வாழ்க்கையை
வெறுக்கும்
புத்திசாலிகளை விட
விரும்பும்
முட்டாள்களே மேல்.

எல்லாரிடமும்
காட்டக்கூடிய அன்பைப்
பற்றி எழுதும்போது
யாரிடமும் காட்டாமல்
இருக்கும்
என் தவிப்பு, தத்தளிப்பு,
கோபம் பற்றியும்
எழுத ஆசைதான்.

சன்னல் வழி மட்டுமே
உலகைப் பார்த்த எனக்கு
என் வீட்டுக்
கதவுகள் என்றும்
வேற்றுகிரகத்தின் வாசலே!






# சித்திரமதி

பிஞ்சுமொழி கொஞ்சி பேசும் பேதை
நஞ்சில்லா நல்லுள்ளம் கொண்ட பெதும்பை
குடிசைகளில் குமரியாகி வளர்ந்திடும் மங்கை
பாங்கிகளோடு பள்ளியிலே பண்பாடும் மடந்தை
அன்போடும் அறிவோடும் அலைபாயும் அறிவை
தன் மனைவிடுத்து தொழில் பல செய்யும் தெறிவை
பேறுபெற்று புதுப்பருவம் கொள்ளும் பேறிளம்பை
பக்குவமும் பண்பாடும் சிக்கனமும் செயல்பாடும்
ஒரு நொடியும் தளராது எக்கணமும் பணியோடும்
குடும்பமும் பணியும் எண்ணமெல்லாம் ஆயிரம்
இவ்வண்டத்தில் யார் கொள்வார் இத்துணை திறம்.

குருதியோடு சிந்தும் தாயின் கண்ணீரும்
குழந்தையும் குமரியானதில் புதுப்பொலிவு பெறும்
வாசலில் வாழைமரங்களும் வீதியில் விழாக்கோலமும்
விருந்தினர்களோடு நிறம்பிடும் வெட்கத்தோடு வஞ்சியவள்
கன்னங்களில் பளிச்சிடும் சந்தனமும் குங்குமமும்
தாய்மாமன் சொந்தமும் சீர்சுமந்து வரும்
தென்னங்கீற்றும் தங்கத்திற்கு திரை போர்த்தும்
வாரத்திற்கு வகை வகையாயப் பண்டங்கள்
பின் மூலையில் பூட்டிடும் பலநூறு கதவுகள்

திங்கள் தோறும் வீழுமருவி தீட்டாகுமெனில்
செங்குருதி சேர்ந்து பாலும்
பழமும் கலந்து உயிருருபெற்று
உலாவிடும் நீ உன்னதமோ?



**ரோகினி**
முதலாமாண்டு

# அப்பா



மூன்றெழுத்து மந்திரமே
வாழ்வில் ஓர் அதிசயமே
அழகிய உறவே
அன்பான துணையே
உயிர்கொடுக்கும் உயிரே
மழலையின் தோழனே
குழந்தையின் வழிகாட்டியே
இருக்கும் இறையே அப்பா!

**காயத்ரி**
முதலாமாண்டு

# தமிழ்


உயிராய் மெய்யாய் உயிர்மெய்யாய்
இயலாய் இசையாய் நாடகமாய்
எந்நாளும் சிறந்து நிற்கும் என் தமிழே
உன்னைப் போற்றி வணங்குகிறேன்!
இளமையாய் செழுமையாய்
வளமாய் எங்கள் உயிர்மூச்சாய்
உலகின் மூத்த எம் செம்மொழியே
நற்றமிழே வாழிய வாழியவே!
காப்பியமாய் காவியமாய்
இதிகாசமாய் இலக்கியங்களாய்
மொழிகளின் அணுவாய் பைந்தமிழ் நீ
கம்பன் வியக்கும் கருவூலம் நீ
இலக்கணங்களில் இமயம் கொண்டாய்
எதுகை மோனையில் ஏற்றம் பெற்றாய்
அகம் புறம் அனைத்தையும் சொன்னாய்
அறம் வளர்க்கும் குறளாய் நின்றாய்
கவிதையாய் கட்டுரையாய்
செவி இனிக்கும் செய்யுளாய்
பார்க்கும் இடமெல்லாம் ஓவியமாய்
முழுமைக்கும் முழுமையான முத்தமிழே!
தன்னிகரில்லா தாய்த்தமிழே
நின் காலடியில்
காணிக்கையாக்குகிறேன் !!!

**ஷர்மிளா**
முதலாமாண்டு

# பொன்னியின் செல்வன்

எத்தனை முறை படித்தாலும் சலித்துப்போகாத காவியம் அது... ஒவ்வொரு தமிழனும் கட்டாயம் படித்து தோழர்களின் வீர உணர்வையும், காதலையும், கடமையையும், பக்தியையும் அறிந்து உடலில் உண்டாகும் அந்த மெய்சிலிர்ப்பை உணர வேண்டும்...

பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...
உனக்குள் மாற்றங்கள் பிறக்கும்
உந்தன் அறைக்குள் புத்தகங்கள் முளைக்கும்




பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...
வாசிப்பது பழக்கமாகும்
வரலாறு இஷ்டமாகும்
புத்தகங்கள் பிடித்துப் போகும்
மற்றவை எல்லாம் சலித்துப் போகும்
எத்தனை முறை படித்தோம் என்ற
எண்ணிக்கை மறந்தே போகும்

பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...
வந்தியத்தேவனாய் வாள் வீசுவாய்
வார்த்தைகளில் அவன் புகழ் பேசுவாய்
அவன் வழித்தடங்களை தேடிச் செல்வாய்
அவன் வாழ்ந்த இடங்களை கோவில் என்பாய்
உண்மையில் ஏதும் தெரியாவிட்டாலும்
உனக்குள் வரலாற்று ஆய்வாளராய்
உன்னையே நினைத்திடுவாய்

குடந்தைக்கும் தஞ்சைக்கும் குடிப்பெயரும்
ஆசை ஒன்றை உள்ளத்தில் உணர்ந்திடுவாய்
கல்வெட்டுகள், கற்றளிகள், செப்பேடுகள்
இவையெல்லாம் பொக்கிஷம் என்பாய்...
அருண்மொழி உனக்குள் அமரனாவான்...
அவன் எழுப்பிய கோவில் அதிசயமாகும்...
பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...
கனவுக்குள் பூங்குழலி கீதங்கள் கேட்கும்

வான்மதியும் வானதியாய்த் தெரியும்
குந்தவையா நந்தினியா பட்டிமன்றம் நடத்தும்

மணிமேகலையின் தியாகமதனில்
மனம் கண்ணீர் வடிக்கும்
உன் வீட்டு அம்மாவும் சில நேரங்களில்
ராக்கம்மாவாய் மாறுவாள்
எதிர் வீட்டுக்காரன் ஆபத்துதவியாய் ஆள் மாறுவான்
ஆழ்வார்க்கடியனாய் உன்னையே உன் மனது உளவு பார்க்கும்
அடுத்தவர் முன் வாதம் செய்ய அது தினமும் அடிக்கும்...

இலங்கைக்கு பயணம் போக இளமனது துடிக்கும்
சேந்தன் அமுதன் ஆகி பக்திப் பண் படிக்கும்
மதுராந்தகனாய் மனம் கிடந்து அடிக்கும்...
அடுத்த நொடி விழித்து விட்டால்
ஆழ் மனதில் வலிக்கும்
ஆதித்த கரிகாலனாய் அது ஆர்ப்பரிக்கும்...

பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...
புத்தகத்தின் பக்கங்களுக்குள் தொலைந்து போக முடியுமா?
புரட்டும்போதெல்லாம் புதிதாய் உணர முடியுமா?
புதினத்தின் மாந்தர் மேல் காதல் உருவாகுமா?
வார்த்தையில் உருவத்தை நினைத்திட முடியுமா?
வாசிப்பில் அந்த வாழ்க்கையை வாழ்ந்திட இயலுமா?
கற்பனைக்குள் உண்மையையும் உண்மைக்குள் கற்பனையும்
ஒன்றாக அறிய முடியுமா?
மொத்த நாகரிகத்தை ஒற்றை கோயிலுக்குள் தெரிந்திட
வேண்டுமா?
பொன்னியின் செல்வன் புரட்டிப்பார்...


பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...
சிற்பங்களின் அழகியல் பக்கங்களில் தோன்றும்
சிந்தைக்குள் வர்ணனையியல் தோற்றம் தோன்றும்
விற்குடி வேந்தனெவன்
புலிக்கொடி வேந்தனெவன்
மீன்கொடி வேந்தனெவன் என
வரலாறு வகுப்பறைக்குள்
தகராறு செய்த எல்லாம்

அழகாக புரிந்திடும்
ஆழ்மனத்தில் உறைந்திடும்
நிகழ்கால விழி அதனில்
கடந்த கால காட்சி எல்லாம்
காணும் சாட்சியாகிட வேண்டுமா
பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...

நேரங்கள் கனவு போனாலும்
வேலைகளில் பழுது ஆனாலும்
வெள்ளித்திரைக்குள் விழுந்து உறங்கினாலும்
சின்னத்திரைக்குள் உறங்கி விழுந்தாலும்
புத்தக வாசனை புதிதாக இருந்தாலும்
பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...
சொர்க்கம் மட்டுமே நிச்சயம்
பொன்னியின் செல்வனைப் புரட்டிப்பார்...

**மானஸா**
முதலாமாண்டு

# பண்ணையில் ஒரு மிருகம்




இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கால்நடை மருத்துவரான திரு. நோயல் நடேசன் சென்னையை அடுத்த காஞ்சீபுரத்திலுள்ள ஒரு பண்ணையில் வேலை செய்த அனுபவத்தைக் கதைக்களமாகியுள்ளார். வேலையில்லாத் திண்டாட்டத்தை எள்ளி நகையாடுவது தனிச்சிறப்பு. பண்ணையில் வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் ' இதற்கு முன் வேலை செய்த மருத்துவர், கற்பகம் எனும் பணிப்பெண்ணின் தற்கொலைக்கு காரணம் அதனால் அவர் வேலையை விட்டுச் சென்றார்.' என்ற மேஸ்திரியின் அதிர்ச்சியூட்டும் தகவலுடன் கதை தொடங்குகிறது.

மேஸ்திரி, ராமசாமி, ராணி, அன்பரசி, கிருஷ்ணன் போன்ற கதை மாந்தர்களின் வழியே, வெங்காய நிறச்சேலையுடன் முக்குத்தி அணிந்த கற்பகம் பேயாக உலா வருவது கதையின் போக்கை விரைவாக்குகிறது. பண்ணையை மையமாகக்கொண்டு நகர்வதால் விலங்குகள் பற்றியும் அறிவியல் பற்றியும் உயிரோட்டமாக உள்ளது.

சாதி மாறித் திருமணம் செய்த தன் மகளின் கணவனைக் (மருமகனை) கொல்லும் கார்மேகம் மூலம் தமிழ்நாட்டிலுள்ள சாதிய வன்மம் மற்றும் விளிம்புநிலைத் தொழிலாளர்களிடத்தில் உள்ள பாகுபாடு ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது

குழந்தைத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகளையும், குழந்தையின்மைக்கு பெண்ணைப் பலியாக்கி மறுமணம் செய்து கொள்ளும் ஆண்களையும் வெளிச்சப்படுத்தியுள்ளது.

கார்மேகத்தின் மகள் கமலம், தன் காதலன் நினைவாக அவன் கொடையளித்த ஆட்டிற்கு "வேலன்" எனத் தன் காதலன் பெயர்சூட்டி வளர்ப்பதும், வேலன் கார்மேகத்தை முட்டித் தள்ளுவதும், சிவப்பி சினைக்கு வருவதும், அதன் குட்டியால் கருப்பையா பழி வாங்கப்படுவதும் திருப்பங்கள்.

வெங்காய நிற சேலை கட்டிய கற்பகத்தின் மரணத்திற்கு கருப்பையா காரணம் என்று தெரிந்தவுடன் முதலாளியின் நடவடிக்கையும் காரல் மார்க்ஸ் புத்தகத்தைப் பற்றி முதலாளியிடம் கூறும் கருப்பையாவும் சூழலின் ஆடல்கள்.

மானுட உள்ளத்தில் உறையும் காமம் மோகம் குரோதங்கள். அதன் வெளிப்பாடுகளால் குறுகிய கீழ்ச்செயல்கள் கொண்ட எளிய மனிதர்களை கண் முன்னே உலவ விட்டிருப்பது இன்றும் புரையோடிக் கொண்டிருக்கும் தனிமனித அவலங்கள் மற்றும் சமூக சீர்கேடுகள் ஆகியவற்றுக்கான அரியதோர் அறுவைசிகிச்சை என்றால் வியப்பில்லை.

**ஜெயசூர்யா**
இரண்டாமாண்டு

# நல்லன்பின் விளைவது வாழ்வு

(பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற பாரதிதாசன் பிறந்த நாள் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கட்டுரை– ஜெயசூர்யா)

**முன்னுரை:**

“அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்” என்ற ஐயன் வள்ளுவனின் நல்வாக்கின்படி அடைக்கும் தாழ் ஏதுமின்றி அமையப்பெற்றது அன்பு. மேலும் நல் ஆசான் அவரே

“*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது*” என்றார்.
இல்வாழ்க்கைக்கு அன்பின் முதன்மையை அறத்திற்கு முன் கூறி சிறப்பித்துள்ளார்.
“அன்புடையோர் அனைத்தும் உடையோர்”.

**பேரன்பின் பெருவாழ்வு:**

நம் வரலாற்றில் அன்பினால் வாழ்ந்த ஆயிரம் சான்றோர்களும் சான்றுகளும் உள்ளன. அவற்றினுள் முதன்மையானவர் நம் தேசத்தந்தை காந்தியடிகள். “அன்பு என்பது கொடுப்பது; பெற்றுக் கொள்வது அல்ல” என்ற உண்மையை உலகறியச் செய்தவர். அன்பும் பண்பும் கருணையும் தன் அகத்தால் நிரப்பி சொற்களால் பரப்பி செயல்களினால் நிலை பெற்றவர். தன் வாழ்க்கையை உடையை பழக்க வழக்கங்களையே போதனைகளாக்கி வாழ்ந்து மறைந்தவர்.

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று அனைத்து உயிர்களையும் கருணைக்கண் கொண்டு பசி எனும் பிணி நீங்கிட ஜீவகாருண்யம் வழி நடந்த நம் அருட்பெருஞ்ஜோதி! தனிப்பெருங்கருணை! வள்ளலார் ராமலிங்க அடிகளின் பாதம் கண்ட பூமி இது. ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று ஆசையை அழிக்கும் அன்பு நெறி கண்ட சித்தார்த்தன் கருணையும் கண்டு புத்தனின் வாழும் நெறி அளந்த பரந்த தேசம் நம் பாரத தேசம்.

**பாரதியும் அன்பும்:**

“*உயிர்களிடத்தில் அன்பு வேணும்- தெய்வம்*
*உண்மை என்று தான் அறிதல் வேண்டும்*
*வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது*
*வாழும் முறைமையடி பாப்பா*”
என்று பாப்பாவிற்கு அறிவுரை கூறும் பொருட்டும்

“*மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்*
*வரம்பு கட்டா விடினும் அன்றி நீர் பாய்ச்சா விடினும்*
*வானுலகு நீர்தரும் மேல் மண்மீது மரங்கள்*
*வகைவகையாக நெற்கள் புற்கள் மலிந்திருக்குமன்றோ ?*

யானெதெற்கும் அஞ்சுகிலேன், மானுடரே நீவிர்!
என் மதத்தைக் கைக்கொண்மின்; பாடுபடல் வேண்டா;
ஊனுடலை வருத்தாதீர்; உணவவியற்கை கொடுக்கும்;

உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்! “ என்று அன்பையே தொழிலாகக் கொண்டு உயிர் வாழச் சொல்கிறார். மேலும் வேடிக்கை மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை வீணடிப்பதை கண்டு வெதும்பி எடுத்துரைக்கும் பாடலும் இதோ ...



*“தேடி சோறு நிதந் தின்று*
*பல சின்னஞ் சிறுகதைகள் பேசி*
*மனம் வாடித் துன்ப மிக உழன்று*
*பிறர் வாட பல செயல்கள் செய்து*
*நரை கூடி கிழப்பருவமெய்தி*
*கொடுங்கூற்றுக் கிரையெனப் பின் மாயும்*
*பல வேடிக்கை மனிதரைப் போலே*
*நான் வீழ்வேனென்று நினைத்தாயோ ? “*
*“சாதிக் கொடுமைகள் வேண்டாம்;*
*அன்பு தன்னில் செலுத்திடும் வையம்”*

என்று அன்பு என்னும் முரசு கொட்டி அகில மாந்தர்க்குதற்கு முண்டாசுக் கவி.

**பாவேந்தரும் அன்பின் வாழ்வும்:**

*“அச்சம் தவிர்ந்தது வாழ்வு -நல்*
*லன்பின் விளைவது வாழ்வு*
*பச்சைப் பசுந்தமிழ் நாட்டில் - தமிழ்*
*பாய்ந்திட வாழ்வது வாழ்வு”*

என்ற கவிதை வரிகளில் அனைவரும் ஒன்று என்றும் சாதி மத பூசல்கள் ஏதுமின்றி அச்சமும் ஐயமும் ஏதுமின்றி அன்பினால் ஒன்றிணைந்து வாழ்வதை நெறியாக்கி உள்ளார். மேலும் புரட்சிக்கவிஞர்

*“தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு*
*சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டென்போன்*
*சின்னதொரு கடுகு போல் உள்ளம் கொண்டோன்*
*தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்”*
*“தூய உள்ளம் அன்பு உள்ளம் சமத்துவ உள்ளம்*
*தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே எனும்*
*தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்”*

என்று உள்ளத்தில் நல்ல உள்ளம் அன்புள்ளம் என்று முதன்மைப்படுத்தி உள்ளார். “நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்”– என்ற கருத்தை பாவேந்தர் குடும்ப விளக்கு எனும் நூலின்

வழியாக வெளிக்கொண்டு வந்துள்ளார். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் அன்பு என்னும் நூலால் கட்டப்பட்டுள்ளார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்புகளை சரியாகப் புரிந்து வாழும் போது இனிய இல்வாழ்க்கை அமைகிறது என்கிறார்.

*"மகிழ்ச்சி எனும் கனிகள்*
*நற்செய்கை என்ற மரத்திற்கு*
*அன்பு எனும் நீர் விடுவதால் விளைவதாகும்."*

**மதங்களும் அன்பும்:**

அன்பையும் கருணையையும் அடிப்படையாகக் கொண்டது இந்து மதம். அன்பை போதித்தவன் சிலுவையில் அறைந்தாலும் சிதையாத புன்னகையுடன் வாழ்ந்த இயேசு பிரான். அன்பை மட்டுமின்றி தான் சேமித்ததில் ஒரு பங்கை இல்லாதோர்க்கு அளிக்கும் ஈகைப் பண்பை வலியுறுத்துவது இஸ்லாமிய மதம். வழியில் உள்ள ஈ, எறும்புகளைக் கூட அழிக்காமல் மயில் தோகையினால் புறந்தள்ளி விட்டு நடக்கும் கொள்கை கொண்டது சமண மதம். புத்த மதத்தின் வாழ்வியலே அன்பை போதிப்பது தான். தோன்றிய மதங்கள் அனைத்தும் அன்பையும் கருணையையும் வலியுறுத்தினாலும் மனித மனத்தின் ஆழ்மன சிந்தனைகளை மதங்களால் மாற்ற இயலவில்லை.

**வழிப்போக்கனின் உள்ளம்:**

எவனோ ஒரு வழிப்போக்கனிடம் தன் வாழ்க்கையை முழுமையாகச் சொல்லி நியாயம் கேட்க இயலும். ஆனால் வழிப்போக்கரிடம் மட்டும் தானே இவற்றை சொல்ல இயலும்?

வாழ்க்கைக்குள் வந்துவிட்ட ஒவ்வொருவருக்கும் சுயநலங்களும் கணக்குகளும் இருக்கின்றன. அவர்களின் அறம் திரிந்து விட்டிருக்கிறது. அவர்களின் கருணை மாசடைந்திருக்கின்றது. அத்தகைய மனிதர்களால் சக மனிதர்களின் கையைப் பற்றிக் கொண்டு உண்மையான அன்புடன் ஒரு சொல் கூட சொல்ல முடிவதில்லை. வழிப்போக்கன் வெறும் மானுடன் அல்லவா? கடவுளும் ஒரு வகையில் வழிப்போக்கன் தானோ? நம் உள்ளத்தின் எல்லைகளை நேர் நிகர் சென்றடைய உலகத்தில் உள்ள ஒருவராலும் இயலாது.

**உலகியல்:**

இந்த உலகியல் கூறுகள் மிகவும் எளிமையானவை. "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை"– என்ற அறப்புதல்வனின் வாக்கே அதற்குச் சான்று. இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் பொருளியல் கடமைகள், கனவுகள் உள்ளன. அதன் பொருட்டு கல்வியும் செல்வமும் ஈட்ட வேண்டியது அவசியம். ஆனால் வெற்று கேளிக்கைகளில் தன் அகத்தையும் பணத்தையும் இழந்து இறுதியில் இறைவனடி சேர வேண்டி காத்திருக்கும் அவல நிலைக்கு ஆளாகிறோம். இந்தப் புற உலக வாழ்க்கை அதன் முடிவில் வெறுமையை அன்றி வேறு எதனை சென்றடைய இயலும்? உலகியல் சார்ந்த எதையும் முழுமையாகப் பின் தொடரும் எவரும் அதன் வெறுமையை சென்றடைவதே இயல்பான முடிவு அதனைத் தவிர வேறு வழியே இல்லை.

**அகத்தேடலும் அன்பும்:**

மனித மனம் விழைவுகளால் ஆனது. விழைவின் பொருட்டு காமக் குரோத மோகங்களால் கட்டமைக்கப்பட்டது. அவற்றைப் பின்தொடரும் பொருட்டு அலைக்கழிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம் எனில் அது மிகையல்ல. அன்பையும் அறிவையும் அன்றி அகத்துனுள் அனைத்து குப்பைகளையும் கொட்டி ஆன்ம விழியை குருடாக்கி வெற்று ஆணவம் மற்றும் அகங்கார செயல்பாடுகளால் தலைநிமிர்ந்து தருக்கி நிற்கிறோம்.

நம் தினசரி வாழ்வில் உறவுகளை மேம்படுத்த அன்பு காட்ட அக்கறை கொள்ள நாமாக முயற்சி செய்வதில்லை. அது நிகழ வேண்டும் என நினைக்கிறோம். அது நிகழாமல் தன் அகங்காரத்தால் தடுத்து வைத்திருக்கிறோம். நாம் நுழைய இயலாத உலகம் ஒன்றுமில்லை.

''அன்புடன் இருப்பது மிக எளிய செயல். அதற்காகக் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொண்டால்'' – ஓஷோ.

**அன்பும் இறையும்:**

''*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்.*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே*'' – திருமூலர்.

அன்பு தான் கடவுள் என்பதை ஆணித்தரமாக சொல்கிறார் திருமூலர்.

''*கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்*
*என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி...*'' மாணிக்கவாசகர்.

**முடிவுரை:**

இந்த உலகில் அதன் ஆயிரம் சதுரங்க களங்களுக்குள் வெற்றி தோல்விகளுக்குள் வணிக கணக்குகளுக்குள் கொடுக்கல் வாங்கல்களுக்குள் ஒரு தனி உலகை உருவாக்கிக் கொள்பவர்களே நுண்ணுணர்வாளர்கள். அது தனி உலகு அல்ல. செறிவூட்டப்பட்ட இன்னொரு வாழ்க்கை. வாழ்க்கை வெல்வதற்கும் நிறைவதற்கும் உரியது. பத்திரமாக பதுங்கி இருப்பதற்குரியதல்ல. வாழும் கணம் மீளாதென்று, பிறிதொருமுறை எதுவும் அமையாது என்று உள்ளுணருங்கள். எனவே அக்கணங்களில் முற்றிலும் நிறையுங்கள். தானென்று எண்ணித் தனதென்று இவ்வாழ்வைக் காண்பவன் துயரையன்றி பிறிதை அடைவதில்லை. சில அம்புகளுக்கு விசை மிகுதி; சில பறவைகளுக்கு சிறகுகள் பெரியவை!

''அன்போடு இருப்பது மிகவும் எளிய செயல்– அதற்காகக் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொண்டால்''!

அன்பின் வழியது உயர்நிலை
ஆம் அவ்வாறே ஆகுக!